
# செம்பதாகை

மலர் 2
இதழ்: 3–4
1981 பங்குனி-சித்திரை
விலை சதம்: 75
புரட்சிகர வெகுஜன ஏடு


## அரசு தன் வங்குரோத்தை பிரகடனம் செய்துள்ளது!

# யூ. என். பி. எதிர்ப்பு அணியை வலுப்படுத்துவோம்!



**யூ. என். பி.** அரசு தனது பங்கலோட்டுத்தனத்தை தானே அம்பலப்படுத்தியுள்ளது. அதன் பொருளாதாரக் கொள்கையின் சீரழிவானது ஒரு எல்லையைத் தாண்டி அடுத்த எல்லையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. அதன் அரசியல் நடவடிக்கைகள் புதிய ரூபத்தில் தனிக்கட்சி சர்வாதிகாரத்தை நோக்கி வேகநடை போடுகின்றது. இந்நிலையில் சகல யூ. என். பி. எதிர்ப்புச் சக்திகளும் ஒரு பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஐக்கியப்பட்டு யூ. என். பி.யை முறியடிப்பது அவசியமாகும்.

### வெட்கத்திற்கிடமான அரசின் ஒப்புதல்!

நாடு இன்று சிக்கியுள்ள மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்கான காரணத்தைக் கண்டு பிடிக்கவோ அல்லது தீர்வுகாணவோ முடியாத நிலையில் அரசாங்கம் இருக்கிறதென்பதை ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா கடந்த மாதம் ஆனமடுவாவில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் வெளிப்படையாகவே ஒப்புக் கொண்டார். பல அமைச்சர்கள், எதிர் காலம் இருள்சூழ்ந்ததென மக்களுக்கு எச்சரிக்கை செய்தனர். வெட்கத்துக்கிடமான முறையில் இந்த ஒப்புதல் தேர்தல் முடிந்த ஆரம்பநாட்களில் மக்களுக்கு உறுதியளித்த ஒளிமயமான எதிர்காலத்திற்கு முற்றிலும் எதிர்மாறான ஒன்றாகும்.

### மதிய உணவு ஒரு கோப்பை தேநீர்!

நாட்டில் பஞ்சம் ஏற்படத் தொடங்கி விட்டது. ஆயிரக்கணக்கான காரியாலய தொழிற்சாலை ஊழியர்களும் தொழிலாளர்களும் ஒருகோப்பை தேநீர் அருந்திவிட்டு அல்லது ஒருவாய் வெற்றிலை சாப்பிட்டுவிட்டு தமது மதிய போசனம் முடிந்ததாக தமக்குத்தாமே கூறிக் கொள்கின்றனர். குப்பைத் தொட்டிக்குள் ஒருபிடி உணவுதன்னும் வீசப்படாததால், எச்சிற் சோற்றுக்காக அலைபவர்களும் ஏமாற்றமடைகின்றனர். கடுமையான நீண்டகாலப் போராட்டத்தின்மூலம் போராடிப் பெற்ற ஜனநாயக உரிமைகள்கூட ஒரு தட்டுப்பாடான பண்டமாகிவிட்டது. கறுப்புச் சந்தையிலும் அதைப் பெற முடியாதுளது. சிறு எதிர்ப்பைக் கேள்விப்பட்டமாத்திரத்தே ஆயுதப்படைகள் உஷார்ப்படுத்தப்படுகின்றன. பத்திரிகைகளைப் பொறுப்பேற்று அல்லது அவதூறுக் குற்றச்சாட்டின்மீது சட்ட நடவடிக்கைகள் மூலம் பத்திரிகைச்சுதந்திரம் சூறையாடப்பட்டுள்ளது. இன்றைய சந்ததியும், எதிர்காலச் சந்ததியும் தாங்க முடியாத பிரமாண்டமான கடன்பளுவால் அமுக்கப்பட்டுள்ளனர். அதே சமயம் நாடு தொடர்ந்தும் அன்னிய ஏகபோக நிறுவனங்களுக்கு படிப்படியாக விற்கப்பட்டு வருகிறது. மக்களினதும், நாட்டினதும் வாழ்வு மோசமான ஆபத்துக்குள்ளாகியுள்ளது.

### சாக்குப்போக்குகளை தேடி அலைகிறது!

அரசாங்கம் எப்போதும் தனது 'சகதி'யிலிருந்து விடுபடுவதற்காக சாக்குப்போக்குகளைத் தேடிவந்துள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவையும் திட்டித் தீர்த்து இறுதியில் அவரது குடியியல் உரிமையையும் பறித்துள்ளது. சகல அத்தியாவசியப் பொருள்களினதும் விலை அதிகரிப்புக்கு எண்ணெய் விலை அதிகரிப்பே காரணமெனக் கூற முயற்சிக்கிறது. அரசாங்கம் மசகு எண்ணெயை இறக்குமதி செய்து சுத்திகரிக்க ஏற்படும் செலவு ஒருகலனுக்கு ரூபா 14/50 மட்டுமே. ஆனால் ஒரு கலன் பெற்றோலை ரூ. 45/-க்கு அரசு விற்பனை செய்வதை மக்கள் புரிந்துகொண்டுள்ள

(8-ம் பக்கம் பார்க்க)

---

ஊர்வலம்:
நல்லூரிலிருந்து ஆரம்பம்

கூட்டம்:
யாழ்-றிம்மர் மண்டபம்

---

## யூ. என். பி. ஆட்சிக்கு எதிராக இடது கம்யூனிஸ்ட் கட்சியின் புரட்சிகர மேதின

# ஊர்வலம்-கூட்டத்தில் அணிதிரள்வீர்!

# கருத்தும் கண்ணோட்டமும்

ஜனமகன்

## மகாவலி அபிவிருத்திக்கு கோட்டை நிர்மாணத்திற்கு ஆயுதப் படைகளுக்கு: பணம் அள்ளி அள்ளிக் கொட்டப்படுகிறது மக்களின் தேவைக்கோ பணம் இல்லை!

அரசாங்கம் அடிக்கடி இந்த நாட்டுக்குக் கிடைக்கும் பெரும் கடன் தொகைகளைப் பற்றிப் பிரசாரம் செய்யும் பொழுதும், இந்நாட்டில் முதலீடு செய்வதற்காக வந்து போகும் அந்நிய முதலாளிகளைப் பற்றிய செய்திகள் வெளிவரும்பொழுதும், மற்றொரு செய்தியும் நாளுக்கு நாள் முக்கியமடைந்து வருகிறது. நாட்டில் பணப்பஞ்சம் ஏற்பட்டு வருகிறது. வரவு — செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வேளையையடுத்து ஒதுக்கீடுகளில் பதினைந்து சதவீதம் வெட்டப்பட்டது. இப்பொழுது அதிகம் சத்தமின்றி திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் என்பவற்றின் ஒதுக்கீட்டில் மேலும் இருபதுசதவீதம் வெட்டு நடைபெற்றுள்ளது. பல அரசாங்க நிறுவனங்கள் வருட முடிவுக்குள்ளேயே பெரும் பற்றாக்குறையை எதிர்நோக்கவேண்டியிருக்கும் என்பது தெளிவாகியிருக்கிறது.

குறிப்பாக பொது வேலைகள், நெடுஞ்சாலைகள், வைத்தியசேவை, கல்விச் சேவை முதலிய பொதுமக்கள் நலம் சார்ந்த துறைகள் பாரதூரமான பண நெருக்கடியை அனுபவிக்கப் போகின்றன. இவற்றையும் காலப்போக்கில் தனியார் துறைகளாக ஆக்குவதே தார்மீக அரசின் நோக்கமாகும். மக்கள் நலன், அபிவிருத்தி, ஜனநாயகம் என்று வாய் ஓயாமல் கூச்சலிட்டுக்கொண்டிருக்கும் அரசாங்கத்தின் உண்மையான சொரூபத்தை இனங்கண்டு கொள்வதற்கு இவையே உரைகல்லாகும். மக்கள்மீது மேலும்மேலும் சுமைகளைப் போடும் ஓர் அரசு எப்படி மக்கள் நலனைப்பற்றிப் பேச உரிமையுடையதாயிருக்கும்? கொந்துராத்துக்காரர், இறக்குமதியாளர், இரத்தினக்கல் வியாபாரிகள், ஹோட்டல் உரிமையாளர், உயர் அதிகாரிகள் ஆகியோரே இந்த அரசில் பெரும் இலாபம் சம்பாதித்து வாழமுடியும். அரசியல்வாதிகள் இவர்களின் இலாபங்களையே மனங்கொண்டு செயல்படுகின்றனர். தமிழர் வியாபாரக் கூட்டணி இதற்கு விதிவிலக்கல்ல!

ஒருபுறம் இவ்வாறு பொது மக்கள் நலன்சார்ந்த துறைகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் முதலியன பணத்துக்குத் தவிக்கும் பொழுது, மறுபுறம் சில அமைச்சுகளும் சபைகளும் எதுவித கட்டுப்பாடும் இல்லாமல் ஆற்றிலே விடுவது போல பணத்தை இறைப்பதைக் காணக்கூடியதயிருக்கிறது. துரித மகாவலி அபிவிருத்தி என்ற பெயரில் துரிதமாகக் கோடிக்கணக்கான பணம் பலருடைய பைகளில் போவதாகப் பலரும் பேசிக் கொள்வதையும் கேட்கிறோம். ஆற்றிலே போட்டாலும் அளந்துபோட வேண்டும் என்ற பழமொழியும் உண்டு. ஆனால் மகாவலி இதற்கு விதிவிலக்கு. ஆனால் அங்கு வேலைசெய்யும் அதிகாரியொருவர் தனிப்பட்ட முறையில் கருத்துத் தெரிவிக்கையில், "துரித அபிவிருத்தி" பற்றிக் குறிப்பிட்டார். இந்த முறையில் செயல்பட்டால் இன்னும் முப்பது ஆண்டுகள் சென்றாலும் எதுவித அபிவிருத்தியும் ஏற்படாது என்று அவர் சொன்னார். பணம் கோடிக் கணக்கில் செலவிடப்படுவது உண்மைதான். ஆனால் அது எங்கு போய்ச் சேருகிறது என்பதே கேள்வி என்றார் அவர்.

நாட்டின் டணம் விரயம் செய்யப்படும் மற்றோர் இடம் கோட்டையில் நிருமாணிக்கப்பட்டுவரும் சிறீ ஜெயவர்த்தனபுரம். நாடு எதிர்நோக்கும் நெருக்கடிக்குள் புதிய நாடாளுமன்றம் தேவைதானா என்று மக்கள் கேட்கத் துவங்கி இப்பொழுது அது ஓங்கிய குரலாக ஒலிக்கிறது. அரசாங்க உடைமையான ஏரிக்கரைப் பத்திரிகைகளிலும், ஏனைய வெகுசன சாதனங்களிலும் இக்கேள்விக்குப் பதில் கூறுவதுபோல ஜெயவர்த்தனபுரத்தின் அவசியம் பற்றிக் கட்டுரைகள் வந்த வண்ணம் இருக்கின்றன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் வசதியாக இருப்பதற்கு ஏற்ற இடமாகவும் அது இருக்கும் என்பது ஒரு வாதம். இது வியாபாரக் கூட்டணி உறுப்பினர்களுக்கு பெருமகிழ்ச்சியை அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. அமிர்தலிங்கம் கும்பலுக்கு "வசதி" என்ற சொல் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும் என்பதை நாம் விரித்துக் கூறவேண்டிய அவசியபேயில்லை. ஜெயவர்த்தனபுரமும் ஒரு வசதியான தங்குமடமாக இருக்கும்! நிம்மதியாகவும் இருக்கலாம்! ஜெயவர்த்தனபுரத்திலும் வெளிநாடுகளில் சுற்றுலாக்களிலும் சுகமாகவும் — சொகுசாகவும் காலத்தைக் கழிக்கலாம்.

அரசாங்கம் கண்ணை மூடிக்கொண்டு செலவழிக்கும் மற்றுமொருதுறை ஆயுதப் படைகள் சம்பந்தமானதாகும். படைகள் நாளுக்கு நாள் கூட்டப்படுவது மாத்திரமல்ல, அவற்றின் செலவினங்களும் தாராளமாக அதிகரிக்கப்பட்டு வருகின்றன. இந்த நாட்டின்மொத்த செலவினத்தில் இருபது சதவீதம் 'பாதுகாப்பு' என்ற தலைப்பில் செலவிடப்படுவதை முன்னரும் இப்பகுதியில் சுட்டிக்காட்டியுள்ளோம். நவீனத்துவம் என்ற பெயரில் வாகனங்கள், தொடர்பு சாதனக் கருவிகள், சீருடைகள், புதிய கட்டடங்கள் என்று பலவகைப்பட்ட சலுகைகள் முப்படைகளுக்கும் தர்மிஷ்ட அரசு வழங்கிவருகிறது. அமெரிக்காவில் இராணுவ செலவினத்துக்கு இருப்பது சதவீதம் செலவிடப்படுவது போலவே "ஜனநாயக சோஷலிசக் குடியரசான" இலங்கைத் தீவிலும் இருபது சதவீதப் "பாதுகாப்பு" சம்பந்தமாகச் செலவிடப்படுகிறது என்றால் அர்த்தம் என்ன? அந்நிய படையெடுப்புகளிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்காகவா? அல்லது வேறுநாடுகளுக்கு இராணுவ உதவி அளிப்பதற்காகவா? இல்லை. மக்களின் எழுச்சிகளையும், புரட்சிகர சக்திகளையும் நசுக்குவதற்காகத்தான். உள்நாட்டு-வெளிநாட்டு முதலாளித்துவத்தையும் அதன் பாதுகாவலர்களையும் பாதுகாப்பதற்காகத்தான். இந்த எதிர்ப்புரட்சிப் பணியில்தான் யூ.என்.பி.யும், தமிழர் வியாபாரக் கூட்டணியும் அவை போன்ற சக்திகளும் வர்க்க அடிப்படையில் ஒன்றுபடுகின்றன. சிறுமுரண்பாடுகள் பேச்சளவில் இருந்தாலும் நடைமுறையில் — மாக்சிய எதிர்ப்பில் ஒன்றுபடுகின்றன. கனவிலும் நனவிலும் மார்க்சிய சக்திகளை எண்ணி வெருளும் தளர்பதி அமிர் யூ.என்.பி.யுடன் சேர்ந்து இயங்காமல் வேறு எப்படி இயங்க முடியும்? ★

## வானொலி-பத்திரிகைகளில் சோவியத்ஊடுருவல்

அமெரிக்க ஊடுருவல் - ஆதிக்கம் - செல்வாக்கு என்பன இந்நாட்டிலே அதிகரிக்க அதிகரிக்க, வல்லரசுப் போட்டிகளின் விளைவாக சோவியத் முயற்சிகளும் அதிகரித்து வருவதாக விஷயமறிந்த வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது. ஒரு காலத்தில் அமெரிக்க ஊடுருவல் நிறுவனங்களில் கையாண்ட உத்திகளையும் நடவடிக்கைகளையுமே உலகெங்கும் ரஷ்ய நிபுணர்கள் மேற்கொண்டு வருவதாகச் சொல்லப்படுகிறது.

பத்திரிகை, வானொலி முதலிய பொதுமக்கள் தொடர்புள்ள நிறுவனங்களில் கையாட்களை வைத்து இயன்றவரை தமக்கு சார்பான செய்திகளையும், செய்தி விளக்கங்களையும் வெளியிடுவது இவர்களின் பிரதான முயற்சியாகும். அதேவேளையில் நாட்டில் வெளிவரும் சில சஞ்சிகைகளைத் தமது செல்வாக்கிற்கு உட்படுத்துவதில் மற்றொரு முயற்சியாகும். அந்த வகையில் 'டிரியியூன்' 'லங்கா கார்டியன்' ஆகிய இரு ஆங்கில சஞ்சிகைகள் அண்மைக் காலத்தில் சோவியத் ஊதுகுழல்களாக மாறியிருப்பதை அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர். இச்சஞ்சிகைகள், கியூபா, வியட்நாம், கிழக்கு ஜெர்மனி முதலிய நாடுகளின் செய்திச் சேவைகள் மூலம் சோவியத்சார்பான செய்தி விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றன. குறிப்பாக சீன எதிர்ப்பு சம்பந்தமான விடயங்களில் 'டிரிபியூன்' முக்கிய கவனஞ் செலுத்தி வருவதை காணலாம். இதன் ஆசிரியர் இந்தியத் தொடர்புகள்மூலம் சோவியத் கண்ணோட்டத்தை நுட்பமாகப் பரப்பி வருவதாக அவதானிகள் கூறியுள்ளனர். இவ்விருவரும் உள்நாட்டில் தனித்தனி சஞ்சிகைகள் நடாத்துவதுடன் பல மூன்றாவது மண்டல நாடுகளின் பத்திரிகைகளுக்கு இலங்கை நிருபர்களாகவும் பணிபுரிவதால் செய்திகளை வசதியான முறையில் அனுப்பவும் சந்தர்ப்பம் உண்டு. சோவியத் ஊடுருவல்களை முழுமூச்சாக எதிர்க்க வேண்டியது தேசபக்தர்களின் தலையாய கடமையாகும்.

★

## வெளிநாட்டுப் பணம் வராததால் அமிருக்கு ஆத்திரம்

தமிழரசுக் கட்சியாக இருந்த காலத்திலும், பின்னர் தமிழர் வியாபாரக் கூட்டணியாக பெயர் மாற்றம் பெற்ற காலத்திலும் இவற்றின் தலைமைப்பதவியில் இருந்தவர்களுக்கு வெளிநாடுகளில் வசித்துவந்த தமிழர்கள் பலரின் நிதியுதவி தாராளமாய்க் கிடைத்துவந்தது. இது உலகறிந்த இரகசியமாகும். இந்நாட்டு அரசாங்கங்களின் கவனத்தை ஈர்க்குமளவிற்குப் பெருந்தொகைகள் தலைமைப்பீடத்தின் கைகளில் நடமாடிய காலங்களும் இருந்தன. பல்வேறு பாராளுமன்றத் தூதுக்குழுக்களில் இடம் பெற்று அடிக்கடி உலக யாத்திரை போவதுடன், தாமாகவும் நினைத்த வேளைகளில் பலநாடுகளுக்கு தமிழர் கூட்டணித் தலைவர்கள் உல்லாச யாத்திரை போவதற்கோ அல்லது தமது பிள்ளைகளுக்கு அந்நிய நாட்டுப் பல்கலைக்கழகங்களிலே படிக்க இடம்தேடிப் போவதற்கோ இவ்வாறு வெளி நாடுகளிலிருந்து வந்த நிதியுதவி பொதுவாகப் பயன்பட்டது. அரசியல் நடவடிக்கைகளுக்காகப் பணம் கொடுத்தவர்களும் பொதுவில் வாய்திறந்ததில்லை. அமிர் கும்பலுக்கு இந்த ஏற்பாடு அதி உத்தமமான ஒழுங்காக அமைந்தது.

ஆனால் இப்பொழுது நிலைமை மாறியிருப்பதாக பேசிக்கொள்ளப்படுகிறது. அமெரிக்கா, மேற்கு ஜெர்மன், பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய நாடுகளிலிருந்து இப்பொழுது கூட்டணிக்கு நிதியுதவி மிக்க குறைவாகவே வருகிறதாம். இவர்களது சொல் காண்டீபங்கள் இப்பொழுது கூர்மையற்றுக் காணப்படுவதே காரணம் எனத் தெரிகிறது. தமக்குக் கிடைத்துவந்த வருவாய்வேறு சக்திகளுக்குப் போவதே வியாபாரக்கூட்டணித்தலைமைக்குப் பெரும் ஆத்திரத்தை உண்டு பண்ணி வருகிறது. இளைஞர்களின்மேல் சிவசிதம்பரம், அமிர்தலிங்கம் கும்பல் அடிக்கடி ஆத்திரப்பட்டு தாக்குதல் நடத்துவது இதுகாரணமாகவே என்று பலர் பேசிக் கொள்கின்றனர். இளைஞர்கள் கொள்கையைக் கண்டிப்பது ஒருபுறமிருக்க வயிற்றில் அடித்து விட்டார்களே என்பதுதான் தலைமையின் ஆத்திரமாகும். "உதயசூரியன்" பத்திரிகை நடாத்துவதற்குப் பெரும்பாடு படவேண்டியிருக்கிறது என்று அதன் நிர்வாகப் பொறுப்பைச் சுமக்கும் ஒரு வணிக உறுப்பினர்கள் மாதம்மாதம் பணம் சேர்த்து கொடுக்கவேண்டியிருக்கிறதே என்பதே கவலையாம். வெளிநாடுகளிலிருந்து வந்த பணத்தை வீசிப்பழகிய கைகளுக்கு வெறும்கை முழம்போடுவது கஷ்டமாகத்தானே இருக்கும்.

★

## கூட்டணியின் நிபந்தனை!

எதிர்வரும் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலுக்கு கூட்டணியின் சார்பில் வேட்பாளராக நிற்க விரும்புவோருக்கு மூன்று நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளதாம்.

★ 50 ஆயிரம் ரூபாவை ரொக்கமாக வங்கி ஒன்றில் வைப்புச் செய்தவராக இருக்க வேண்டும்

★ சம்பந்தப்பட்ட தொகுதியில் மிகச் செல்வாக்கு உள்ளவராக இருத்தல் வேண்டும்.

★ கட்சி (கூட்டணி) மீது மிகப் பற்றுடையவராக இருத்தல் வேண்டும்.

இம்மூன்று "நிபந்தனைகளும்" ஒருங்கே அமையப்பெற்றால் மட்டுமே ஒருவர் கூட்டணியின் வேட்பாளராக விண்ணப்பிக்க முடியுமாம். தமிழர் கூட்டணி வசதி படைத்தவர்களின் கட்சியா? அன்றி சாதாரண தமிழ்மக்களின் கட்சியா? தமிழ்மக்களே சிந்தித்துப்பாருங்கள்.

# சாதி வெறி கிளப்பப்படுகின்றது

## சகல மக்களும் விழிப்புடன் இருக்க வேண்டும்!

தமிழ் ஈழம் ஒன்றுமட்டும்தான் சகல தமிழ் மக்களினதும் தாரக மந்திரம். சாதி, சமூக வர்க்கவேறுபாடெல்லாம் இரண்டாம் மூன்றும் பட்சமானவை. உடுப்பிட்டியில் ஒரு தாழ்த்தப்பட்டவரை பாராளுமன்ற உறுப்பினராகவரவைத்துள்ளோம். இதன்பின்பும் சாதி இருக்கின்றதா? இப்படிக் கேட்டவர்கள் கூட்டணித் தலைவர்கள். அதற்கு அடிமை விசுவாசம் தெரிவித்து 'ஆமாம்' தலையசைத்தவர்கள் இராஜலிங்கமும் அவரது சகாக்களும்தான்.

ஆனால் இன்று அதே இராஜலிங்கம் தன்னை சாதி பார்த்து கூட்டணிக்குள்ளேயே ஒதுக்குகிறார்கள். ஒரு மாதிரியாகப் பார்க்கிறார்கள். மாதிழலில் வைத்துக்கதைத்து விட்டு அனுப்புகின்றார்கள், என்றெல்லாம் ஒப்பாரி வைக்கின்றார். இந்தவேளை இராஜலிங்கத்தை மையமாக வைத்துச் சாதிவெறி தூண்டப்படுகின்றது. கூட்டணியின் கோட்டைக்குள் இருந்தே இச்சாதிவெறி தூண்டப்படுகின்றது. சாதாரண மக்கள் மத்திக்கு இச்சாதிவெறி வலுக்கட்டாயமாக இழுத்துச் செல்லப்படுகின்றது கடந்த கால போராட்டங்களின் பின்னல் உழைக்கும் தமிழ்மக்கள் மத்தியில் வர்க்கரீதியான ஐக்கியம் அரசியல் ரீதியில் நடைமுறைக்கு வந்ததை எவரும் மறுக்க முடியாது. ஆனால் அந்த ஐக்கியம் சொத்துடைய உயர் வர்க்கத் தமிழர்களை அச்சுறுத்துவதால் மீண்டும் சாதிவெறியைதூண்டி சாதாரண தமிழ் மக்கள் மத்தியில் வளரும் வர்க்க ஐக்கியத்திற்கு வேட்டுவைக்க முயற்சிகள் நடைபெறுகின்றன.

சாதிவெறி எனும்போது அது தனியே உயர்சாதியினர் மத்தியிலுள்ள சாதிவெறியர்களினால் மட்டும் கிளப்பப்படும் ஒன்றல்ல. அது தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் உள்ள ஒரு சிலராலும் கிளப்பப்படுகிறது என்பதை சகல மக்களும் நன்கு உணரல் வேண்டும். சாதியின் பெயரால் பதவி பட்டம், உத்தியோகம், அரசாங்க சலுகைகள் சுயநல அடிப்படையில் பெற்றுக்கொள்வோரும் தமது வியாபாரம், தொழில் விளம்பரம், பிரமுகர்கள், எழுத்தாளர்கள் என்ற பட்டங்களைப் பாதுகாக்க விரும்புபவர்களும் சாதிவெறியைத் தூண்டுகின்றார்கள்.

தமிழ் சிங்கள உழைக்கும் மக்கள் மத்தியில் எவ்வாறு இனவாதத்தை கீழ்த்தர வழிகளில் பரப்பி அதன் மூலம் அரசியல் இலாபம் பெறும் தமிழ்—சிங்கள பாராளுமன்ற அரசியல்வாதிகள் போல் உயர்சாதியினர் எனக் கூறப்படுபவர்கள் மத்தியில் உள்ள பிற்போக்கு சுயநலக் கும்பலும் அதேபோல் தாழ்த்தப்படுபவர்கள் எனக் கூறப்படும் மக்கள்மத்தியில் உள்ள சுயநலக்கும்பலும் பரஸ்பரம் சாதிவெறியைக்கிளப்பும் நிலையைச் சகல மக்களும் அவதானித்துக்கொள்வது அவசியம்.

எனவே சாதி வெறியானது எந்தப் பக்கத்தில் வந்தாலும் அது எந்த ரூபத்தில் வந்தாலும் அதை எதிர்த்து மாக்சிசம்—லெனினிசம்—மாசேதுங் சிந்தனை வழிகாட்டும் புரட்சிகர—வர்க்க அரசியல் பாதையில் மக்களை அணி திரட்டி முன்செல்வது அவசியமாகும்.

## கட்டிட - நெடுஞ்சாலை திணைக்களங்களில்

# தொழிலாளர் விரட்டியடிப்பு

அரசாங்க திணைக்களங்களான கட்டிடத்திணைக்களம் நெடுஞ்சாலைகள் திணைக்களம் ஆகியவற்றில் பதினைந்து பத்து வருடங்களுக்கு மேல் வேலை செய்துவந்த சாதாரண தொழிலாளர்கள் படிப்படியாக வேலையைவிட்டு துரத்தப்பட்டு வருகின்றனர். இத்தொழிலாளர்கள் கடந்த பதினைந்து வருடங்களாக நிரந்தரமற்ற தற்காலிக சேவை அடிப்படையில் வேலை வாங்கப்பட்டு வந்தனர். நிரந்தர தொழிலாளர்கள் அனுபவிக்கும் எந்தச் சலுகையுமின்றி வேலைசெய்து வந்த பல்லாயிரக்கணக்கான இத்தொழிலாளர்கள் ஒரு கட்டத்தில் தங்களுக்கும் நிரந்தர நியமனம் கிடைக்கும் என நம்பியே கடுமையாக வேலை செய்து வந்தனர். ஆனால் இன்று அவர்களை வீட்டுக்கு அனுப்பும் வேலையையோ மேற்படி திணைக்களங்கள் செய்து வருகின்றன, கட்டிடத்திணைக்களத்தில் ஏறக்குறைய பத்தாயிரம் பேர்வரையில் உள்ளனர். மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா மற்றும் தென் மாகாணப் பகுதிகளில் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

அதேபோல் நெடுஞ்சாலை திணைக்களத்தில் வேலைசெய்த தொழிலாளர்கள் ஏற்கனவே நூற்றுக்கணக்கில் வேலை மறுக்கப்பட்டுளது. ஒருசிலருக்கு மாதத்தில் பத்து நாள் வேலைமாத்திரம் கிள்ளித் தெளிக்கப்படுகின்றது.

இவ்வேலை நீக்கம் காட்டுவது என்னவெனில் விரைவில் கட்டிடத்திணைக்களம் நெடுஞ்சாலைத் திணைக்களம் ஆகியன செய்துவந்த கட்டிட நிர்மாணம், நெடுஞ்சாலை அமைத்தல் போன்ற வேலைகள் யாவும் தனிப்பட்ட பெரும் கொந்தராத்துக்காரர்களுக்கு அவர்களின் கொள்ளை இலாபத்திற்காகத் தாரைவார்க்கப்படப் போகிறது என்பதேயாகும். தனி முதலாளிகளையும் கம்பனி முதலாளிகளையும் கொழுக்க வைக்கும் திட்டத்தின் ஒருபகுதியே மேற்படி திணைக்களங்களில் தொழிலாளர் துரத்தப் படுவதன் உள்நோக்கமாகும்.

## தோட்டத் தொழிலாளர்களின் நலன்களைத்

# தொண்டமானல் கவனிக்க முடியாது

### — இ. தோ. தொழிலாளர் சங்கத்தின் பசறைக் கூட்டத்தில்தோழர் கரவிட்ட—

தோட்டத் தொழிலாளர்களின் நலன்களை ஒரே இனத்தைச் சேர்ந்த ஒரே மொழியைப் பேசுபவர் என்ற காரணத்தால் தொண்டமான் கவனிக்க முடியுமென்றால் ஞானமும் செய்ய முடியும். அப்படியானல் ஜே. ஆர். ஜயவர்த்தன ஒரு சிங்களவர் என்றபடியால் அவர் சிங்களத் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் அதேபோல் அமிர்தலிங்கம் கூட்டத்தினர் இலங்கைத் தமிழர்களையும், முகமதுவும், ஷமீதும உழைக்கும் முஸ்லிம் மக்களின் நலன்களையும் கவனிப்பதில் வெற்றி காண முடியுமல்லவா?

இது உண்மையானல் மேலே கூறப்பட்ட நபர்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து ஓர் அரசாங்கம் அமைத்து இலங்கையின் தொழிலாள வர்க்கத்தினரினதும் மற்றும் ஏனைய வெகுஜனங்கள் அனைவரினதும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கலாமல்லவா? இவ்வாறன கூற்று வெறும் வெற்றுப் பேச்சு மட்டுமன்றி மிக முட்டாள்தனமானது மாகும்.

எந்த இனமோ மதமோ சகல அரசியல்வாதிகளும் இறுதியில் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினருக்கே சேவை செய்கின்றனர். இலங்கையிலும், வேறு நாடுகளிலும் இது தெட்டத்தெளிவாக நிரூபிக்கப்படுகின்றது.

சிங்களத் தொழிலாளருக்கெதிரான நடவடிக்கையிலும் ஜே. ஆர். ஜயவர்த்தன ஞானத்தைப் பாதுகாக்கப் பின்னிற்கமாட்டார். ஏனெனில் ஜே. ஆர். முதலாளிகளின் ஏஜன்ட். அவர் சிங்கள அல்லது வேறு எந்த வெகுஜனத்தினதும் பிரதிநிதியல்ல. தோட்டத் தொழிலாளர்கள் ஒரே மொழியைப் பேசுகிறவர்கள் என்றபோதிலும் திரு. தொண்டமான் தோட்டத் தொழிலாளர்களின் நலன்களை முற்றாக உதாசீனம் செய்து உபாலி விஜயவர்த்தனவின் நலன்களை பாதுகாக்கத் தன்னாலான சகலதையும் செய்வார் என்பதிலும் சந்தேகம் இருக்க முடியாது.

முதற்தடவையாக இலங்கையில் இரண்டு முஸ்லிம்கள் இரண்டு முக்கியமான மந்திரிப்பதவிகள் வகிக்கின்றனர். அத்துடன் ஒரு முஸ்லிம் நாடாளுமன்றத்தின் சபாநாயகராகவும் இருக்கின்றார். அதன்மூலம் உழைக்கும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிட்டதா? நிச்சயமாக இல்லை. நீங்கள் கொம்பனித்தெருவிற்கு அல்லது கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம் கிராமத்திற்குப் போனல் அங்கு வாழும் முஸ்லிம் மக்கள் எவ்வளவு மோசமான வறுமையிலும் துன்பத்திலும் வாழ்கின்றார்கள் என்பதைக் காணமுடியும்.

முஸ்லிம் இரத்தினக்கல் வியாபாரிகளும் பெரும் வர்த்தகர்களும் நன்றாகத்தான் வாழ்கின்றார்கள். ஒரு முஸ்லிம்தானும் நாடாளுமன்றத்தில் இல்லாவிட்டாலும் இவர்கள் நன்றாகத்தான் வாழ்வார்கள். ஏனெனில் இவர்களின் நலன்களைக் கவனிப்பதற்கு ஜே. ஆர். ஜயவர்த்தன குழுவினர் இருக்கிறார்கள். இதுதான் வர்க்க அரசியலின் சாராம்சமாகும்.

கடந்த பொதுத் தேர்தலுக்குமுன் இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளருக்கு எதிராக உணர்ச்சியை சில தீயசக்திகள் கிளப்பின. சென்ற அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. தோட்டத் தொழிலாளர்கள் இதன் காரணமாக தொண்டமானும், யூ.என்.பியும் நமது இரட்சகர்கள் என எண்ணி அவர்களின் அபேட்சகர்களை முற்று முழுதாக ஆதரித்தனர்.

ஆனல் இன்று நடந்தது என்ன? சென்ற அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் ... தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச்சம்பளம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கைக்காக எம்முடன் சேர்ந்து ஆர்ப்பரித்தவர்களில் தொண்டமானும் ஒருவர். அப்போது தோட்டத்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் கொல்வின் ஆர். டி. சில்வா இதை எதிர்த்தார். இன்று மாதச்சம்பள விடயத்தில் தொண்டமான் மௌனம் சாதிக்கிறார். ஆனல் மந்திரியல்லாத கொல்வின் இன்று இ. தோ.தொ. சங்கத்தலைவர் மாதச்சம்பளக் கோரிக்கையை ஆதரிக்கிறார். இவர்களின் சந்தர்ப்பவாதத்தை இதிலிருந்து நீங்கள் புரிந்து கொள்ளலாம். மாதச் சம்பளத்திற்கு ஆதரவா? இல்லையா? என்பது அவர்கள் அமைச்சர்களாக இருக்கிறார்களா அல்லது இல்லையா என் பதிலேயே தங்கியுள்ளது.

மாதச்சம்பளம் போகட்டும் 1980 நவம்பர் மாதத்திலிருந்து தொண்டமானின் அமைச்சிலுள்ள ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட எழுபது ரூபா சம்பள அதிகரிப்பைத் தன்னும் தோட்டத் தொழிலாளர்களுக்குத்தொண்டமானல் பெற்றுத்தர முடியவில்லை. இவர்கள் எப்பேற்பட்ட வகையில் தோட்டத்

(6-ம் பக்கம் பார்க்)

## வாசகர் கடிதங்கள்

செம்பதாகை மலையக செய்திகளுக்கு முக்கிய இடம் கொடுத்து வருவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். தொண்டமான் -இ.தொ.கா. வின் ஏமாற்றை அம்பலப்படுத்துவதிலும், எதிர்ப்பதிலும் மட்டுமன்றி உண்மையான புரட்சிகரப் பாதையை காட்டுவதிலும் செம்பதாகை பத்திரிகை முன்நிற்கிறது என்பதையும் கூறிக்கொள்கின்றேன்.

ஆர். தங்கராசா
அப்புத்தளை

★

நடந்து முடிந்த உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடு பற்றி பல பத்திரிகைகள் பக்கம்பக்கமாக செய்திகள், கட்டுரைகள் வெளியிட்டன. ஆனல்செம்பதாகையில் சோ. தேவராஜாவினல் எழுதப்பட்ட இரு கட்டுரைகளும் மிகத் தரம் வாய்ந்தனவாக இருந்தன. புதிய கோணத்தில் ஆழமான சிந்தனையைத் தூண்டிநின்றன. இதுபோன்ற புதிய கோண சிந்தனைகளைத் தூண்டவும் அவற்றைச்செயல் ரூபப்படுத்துவதற்கும் மேலும் பல கட்டுரைகளை செம்பதாகை வெளியிட வேண்டும் என வேண்டுகின்றேன்.

எஸ். குணசீலன்
வெள்ளவத்தை

★

யூ. என். பி. எதிர்ப்பு இயக்கங்கள் கடைப்பிடித்து ஒழுகவேண்டிய மார்க்கத்துக்கான ஒளியை மாசிமாத இதழில் படித்து மகிழ்ந்தேன். பலம்மிக்க ஐக்கிய முன்னணி ஒன்றிற்கு அத்திவாரமாகப் பொதுவேலைத்திட்டம் ஒன்று அமைவது அவசியம் என்பதைப் படித்தபோதுதான். தேர்தலுக்கான ஐக்கியமாக இல்லாமல் உண்மையாகவே யூ.என்.பி.யை தோற்கடிக்கும் பலம் மிக்க ஒரு ஐக்கியமுன்னணி எவ்வாறு கட்டியெழுப்பப்படவேண்டும் என்ற என் நெடுநாள் சந்தேகம் தீர்க்கப்பட்டது.

இ. கருணாகரன்
நல்லூர்

★

தமிழர்களை ஏமாற்றி அரசியல் மோசடி செய்து வரும் தமிழர் கூட்டணியை அக்குவேறு ஆணிவேருகப் பிய்த்துக்காட்டும் செம்பதாகையின் பணி இன்றைய சந்தர்ப்பத்தில் மிக மிக அவசியம். அதன் பணிதொடர எனது நல்லாசிகள்.

க. சண்முகராசா
கிளிநொச்சி

கலை இலக்கியம்

# யாருக்கு சேவை செய்ய வேண்டும்?

யாருக்குச் சேவை செய்வதென்பது ஓர் அரசியல் விதி. இது சகல கலை இலக்கிய அமைப்புகட்கும் பொருந்தும். இலக்கியம் தொழிலாளர்கள் — விவசாயிகள், போர்வீரர்கள் ஆகியோருக்குச் சேவை செய்ய வேண்டுமென தலைவர் மாஓ அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார். அதுவே எமது அரசியல் விதி. தொழிலாளர்கள், விவசாயிகள், போர்வீரர்கள் ஆகியோருக்குச் சேவை செய்வது, உழைக்கும் மக்களுக்கு சேவைசெய் ல், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் மக்களுக்குச் சேவை செய்தல் — இதுதான் கலை. இலக்கியத்தின் ஒரேயொரு அரசியல் விதியாகும். அரசியல் விதி என்பது அதுவே எல்லாமென்று பொருள் இல்லை. அங்கே கலையம்சத்தின் விதியும் இருக்கிறது. எப்படிச் சேவை செய்வது என்ற கேள்வியும் இருக்கிறது. [இங்கு சேவை கலை, இலக்கி உருவங்கள் மூலம் செய்யப்படுகின்றது. இவை பல் வேறு வகையிலானவை இவை அச்சுப்பதித்ததுபோல் இருக்கக் கூடாது.

## கோஷம் போடுவது கலையாகாது

கலை இலக்கியம் பாத்திரங்கள் மூலமாகவே அரசியலுக்குச் சேவைசெய்கிறது. பாத்திரங்கள் மூலமே கருத்துக்களை வெளிப்படுத்த முடியும். பாத்திரங்கள் இல்லாவிடில் கலை இலக்கியம இல்லாமல் போய்விடும். அப்படியானால் அவை அரசியலுக்கு சேவை செய்வதுபற்றி எப்படி ஒருவர் பேச முடியும்? கோஷம் போடுவது கலையாகாது. கலை இலக்கியம் மக்களுக்கு நன்றாகச் சேவை செய்யவேண்டுமானால், அவை நடைமுறைமூலம் பரீட்சிக்கப்பட வேண்டும். அவை மக்களால் ரசிக்கப்பட வேண்டும். நீங்கள் உருவாக்கிய பாத்திரங்கள்வெற்றிகரமானவையா அல்லவா, அவை மக்களால் வரவேற்கப்படுகின்றனவா அல்லவா என்பதைத் தலைமையின் அங்கீகாரம் பெறுவதால் தீர்மானிக்க முடியாது. இது எப்படியோ மக்களால் எடுக்கும் முடிவுகளை விட தலைமையில் எடுக்கும் முடிவுகளே அதிகமாயுள்ளன; ஒரு கலை உருவம் நல்லதா கூடாதா என்பதைத் தீர்மானிக்கவேண்டியவர்கள் மக்களேயன்றித் தலைமையல்ல. ஒரு உருவத்தில் அரசியல் தவறு இருந்தால், சோஷலிச விரோதமானால் நாம் நிச்சயம் அதனை விமர்சிக்கவேண்டும். கட்டுப்பாடில்லாமல் அதனைப் பரப்பவிடக்கூடாது. ஆனால் இது போன்ற படைப்புக்கள் மிகக் குறைவாகவே உள்ளன.

## கலை மக்களால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்

கலை மக்களால் அங்கீகரிக்கப்பட வேண்டும். மக்கள் அதனை விரும்பும்வரை அது பயன்படும். அதுகட்சிவிரோத சோஷலிச விரோத நோக்கம் கொண்டதாய் இல்லாதவரை அது அனுமதிக்கப்படவேண்டும். அதனைத் தடைசெய்வதற்கு எவருக்கும் அதிகாரம் கிடையாது. கலைஞர்கள் தலைவர்களை மட்டுமல்ல, மக்களை மனதில் வைத்திருக்க வேண்டும். இது தலைமைக்கு எதிரான போக்கு ஆகுமா? இல்லவே இல்லை. அரசியல் பிரச்சினைகள் பற்றித் தமது கருத்துக்களைத் தெரிவிக்கும் உரிமை தலைமைக்கு உண்டு. அரசியல் ஆணையில் இருக்கவேண்டும். அதாவது பிரதானமாக ஒரு கலை உருவம் மணமுள்ள மலரா அல்லது நச்சுக் கொடியா? அது கட்சி விரோதமானதா சோஷலிச விரோதமானதா? இது விடயமாக அரசியல் ஆய்வு தேவைதான். ஆனால் கலை அம்சங்களைப் பொறுத்தவரை எமக்குத் தெரிந்தவை சொற்பமானவை எமக்குத் தெரிந்தவை சொற்பமானதால் எமக்குப் பேசும் உரிமையும் சொற்பமானவையாதலால் நாம் தேவையில்லாமல் தலையிடக்கூடாது. இங்குள்ள சகல தோழர்களும் தலைவர்கள். நீங்கள் குறைவாகவே தலையிடுவீர்களென நம்புகின்றேன். ஆனால் நீங்கள் பொறுப்பு அற்றவர்களாக இருக்கவேண்டுமென்று அர்த்தம் இல்லை. முதலில் நீங்கள் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும். இரண்டாவதாக நீங்கள்குறைவாகத் தலையிட வேண்டும். பொறுப் பென்கின்றபோது நான் அரசியல் பொறுப்பையே குறிப்பிடுகின்றேன் நச்சுள்ள பூண்டுகளும், திரிபுவாதமும் தலைதூக்கியாட நாம் விடக்கூடாது. ஆனால் நாம் தெளிவாக வேறுபடுத்திப் பார்க்கவேண்டும் எல்லாவற்றையும் திரிபுவாதம் என்று பெயர் சூட்டக் கூடாது

## கலை இலக்கியம் பொழுதுபோக்குடன் ஒத்துப்போகுமா?

என்னை யாரோ கேட்டார்கள், கலை இலக்கியத்தின் கல்வியூட்டும் கடமை பொழுதுபோக்குக்கான கடமையுடன் ஒத்தப்போகுமா என்று. இயங்கியல் ரீதியில் பார்த்தால் 'ஆம்' என்றே கூறவேண்டும். நாடகங்களையோ சினிமாப் படங்களையோ பார்க்கச் செல்லும் மக்கள் பொழுதுபோக்க — ஆறியிருக்க விரும்புகின்றனர். நீங்கள் உருவாக்கும் குறிப்பிட்ட பாத்திரங்கள் மூலம் அவர்கட்கு அறிவூட்ட முடியும். கல்வி, இளைப்பாற்றுதல்மூலம் புகட்டப்படுகிறது. பரவலான பல்வேறு விடயங்கள் கையாளப்பட வேண்டும். நெடுகிலுமே யுத்தம்பற்றியதாய் இருக்கக் கூடாது. தோழர் சூதே குறிப்பிட்டார். "என்வாழ்வு பூராவும் நான் யுத்தம் செய்தேன்; யுத்தம் அல்லாத படங்களை நான் பார்க்க விரும்புகின்றேன்." யுத்தப் படங்களையே நீங்கள் ஒவ்வொரு நாளும் காட்டினால் அவர்கள் வெறுப்படைந்து ஹொங்கொங்படங்களைப் பார்க்க விரும்புவர். இதிலிருந்து சினிமாக் குழு தனது வேலைகளைச் சரியாகச் செய்யவில்லை என்று தெரிகிறது. மறுபுறம் யுத்தப் படங்கள் எதுவுமே இல்லாமலும் போய்விடக் கூடாது. இளைஞர்கள் தமது போராடும் தன்மையை இழந்துவிடக்கூடும். பொதுவாகப் படங்களில் சரித்திரக் கதைகளுக்கும் நிகழ்கால சம்பவங்களுக்கும் இடையே ஒரு சமநிலை இருக்கவேண்டும்.

விடயதானங்களை பொறுத்தவரை எழுத்தாளர் தாம் விரும்புவதை எழுதவேண்டும். பழங்காலங்களில் சோஷலிசம் இருக்கவில்லை. ஆனால் சீனமக்கள் மத்தியில் சிறந்த பண்பாடுகள், பாரம்பரியங்கள் இருந்தன. மக்கள் பல சிறந்த பாத்திரங்களைத் தயாரித்தனர். பெருமளவு நம்ப முடியாத கற்பனைகளுமிருந்தன. இவை யாவும் எழுதுவதற்குப்பொருத்தமானவை. ஆம், எல்லாவற்றிற்குமே வரையறையிருக்க வேண்டும். ஆனால் அவை இடத்திற்கு ஏற்றவாறு மாறுபட வேண்டும். சில ஒப்பரு உருவங்கள் இராகதாளங்களுக்குகந்தனவாகும். யுத்தக் களுவுலங்களை அவை இடையிடையேதான் காட்ட முடியும். உதாரணமாக சாஜசிங் ஒப்பருவில் நடிகர்கள் யாவரும் பெண்கள். "செங்கோட்டையின் கனவு" என்ற நாடகத்தை அவர்கள் காட்டும் போது இரம்மியமாயிருக்கிறது. ஆனால் இந்த உருவத்தில் யுத்தக் காட்சிகள் காண்பிக்கமுடியாது.

சினிமாத் துறையைப் பொறுத்தவரை உதாரணமாகக் கிராமப்புறங்களுக்கு வேறு விதமாகவும் தொழிற்சாலைகட்கு வேறுவிதமாகவும் அவர்கட்கு ஏற்றமுறையில் ஒழுங்கு செய்யவேண்டும். ஆனால் முழுமையாக, அவர்கள் தமது வாழ்க்கையை மேம்படுத்தக் கூடிய முறையில் அவர்களுக்கு நாம் ஏதாவது கொடுக்க வேண்டும். ஒருபுறம் தொழிலின் மகத்துவத்தை நாம் போற்ற வேண்டும். அதே வேளையில் இளைப்பாற இன்பமுறக் கூடியனவற்றையும் அளிக்க வேண்டும். இளைஞர்கட்குப் புரட்சிசெய்வதன் கஷ்டங்களையும் நாம் சோஷலிசத்தை அடையச் சிரமப்பட வேண்டும் என்பதையும் எடுத்துரைக்க வேண்டும். புரட்சிகரப் போராட்டங்களின் கரடுமுரடான[பாதைகள்பற்றிப் பல படங்கள் ஆக்கப்படவேண்டும். நாடகங்கள் தடிக்கப்படவேண்டும். கடந்த காலத்தை அவர்கள் மறவாது இருக்க வேண்டும்.

விடயதானம்பற்றி ஓர் பொதுசன சமநிலை ஏற்படுத்த கலாசார அமைச்சு மேலும் செயல்படவேண்டும், ஆனால் வற்புறுத்தல் மூலம் அதிகாரதோரணையில் தலையிடக்கூடாது. "டாஜியும் அவரது தந்தைமாரும்" என்ற கதையை நான் படித்துள்ளேன். இதே தலைப்பில் சினிமாவும் நான் பார்த்தேன். இரண்டிலும் வரவேற்கத்தக்க அம்சங்கள் உள்ளன. நாவல்மட்டுப்படுத்தப்பட்டது. 'பீ' இன மக்களின் உண்மையான குணம்சத்தைஎடுத்துக்காட்டுகிறது. ஆனால் கொஞ்சம் கரடுமுரடாக உள்ளது. சினிமாவில் அழகாகக் கையாளப்பட்டுள்ளது. ஆனால் முடிவில் பாத்திரங்கள் அழவேண்டிய நேரம் அழவில்லை. அழுகையை அடக்கிவிட்டனர். ஒருவேளை "அளவுக்கதிகமான மென்மையான மனம் படைத்தவர்" என்ற குற்றச்சாட்டுக்கு இயக்குனர் பயந்துவிட்டாரோ தெரியவில்லை.

## பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டம்

பாட்டாளிகளாகிய எமக்குப் பாட்டாளிவர்க்க மனித இயல்பு உண்டு. அதனை நாம் காட்டுவதற்கு ஏன் அஞ்சவேண்டும்? 'மனித இயல்புபற்றிய தத்துவம்', 'மனித வர்க்கத்தின் மீதான அன்பு' 'மனிதாபிமானம்' 'காரியவாதம்' ஆகிய கொள்கைகளைக் குழப்புமளவுக்கு ஏதோ டலவந்தம் இருக்கிறது. பொதுவாக நாம் "காரியவாதத்துக்கு" எதிரானவர்கள் அல்ல. எம்மிடம் எமது பாட்டாளிவர்க்க காரியவாதம், மனித இயல்பு, நட்புறவு, மனிதாபிமானம் எல்லாம் உண்டு. இன்று நடைபெறுவதைப் பார்த்தால், பிரச்சினைகளைப் பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டில் வர்க்க கண்ணோட்டத்தில் பார்ப்பதாக தெரியவில்லை' மாறாக இது ஓர் கருத்து முதல்வாத முறையில் பார்க்கப்படுகிறது. கலாசாரத்தின் இடத்தை அரசியலுக்கு கொடுத்தால் பின்பு கலாச்சாரமே இருக்காது. அப்போது யாரையாவது கவர்வதற்கு என்ன இருக்கிறது?

## கலைகலைக்காக அல்ல

வேறொரு விடயம், கலாசாரத்துறையில் வேலை செய்பவர்கள் பொருளாதார அடிப்படையைக் கற்கவேண்டும். சிந்தனைகள் வழிகாட்டுகின்றன. ஆனால் பொருளாதார அபிவிருத்தியை தொடர்ந்துதான் கலாசார அபிவிருத்தி ஊக்கமடையும். கலாசார நிறுவனங்களின் வளர்ச்சி கட்டுப்பாடற்றதாய் இருக்கக்கூடாது. அளவுக்கு மிஞ்சிய கலாசாரநிறுவனங்கள், சர்வகலாசாலைகளும் பாடசாலைகளும் இருந்தால் அவை பொருளாதார வளர்ச்சியின் மட்டத்தை மீறி நின்றால் பொருளாதார அடிப்படையும் உற்பத்தியும் பாதிக்கப்படும். இவை உற்பத்திக்குச் சேவை செய்ய வேண்டும் என்றிருந்தாலும் நேர்மாறான நிலை ஏற்படும். கலாசாரத்தின் சேவைக்கு உற்பத்தி, கலைகலைக்காக என்றிருந்தால் இறுதியில் கலையே அழிந்துவிடும்.

★

(மேற்படி கட்டுரை கலை இலக்கியம்பற்றிய தோழர் சௌ என் லாய் அவர்களால் ஆற்றப்பட்ட உரையிலிருந்துஎடுக்கப்பட்டதாகும்)

—ஆசிரியர் குழு

---

எழுத்தாளர்களிடமிருந்து :

★ கவிதை ★ கட்டுரை

★ சிறுகதை ★ விமர்சனம்

மற்றும் கலை இலக்கிய ஆக்கங்களை செம்பதாகையின் கலை இலக்கியப் பகுதி ஆர்வத்துடன் எதிர் பார்க்கின்றது.

ஆக்கங்கள் யாவும் தரமானவையாகவும் சுருக்கமானவையாகவும் இருத்தல் வேண்டும்.

தொடர்பு :-
ஆசிரியர் குழு
கலை இலக்கியப் பகுதி
'செம்பதாகை
15/1, மின்சாரநிலைய வீதி
யாழ்ப்பாணம்.

## மஸ்கெலியா - பிரவுண்லோ தோட்டத்தில்
# காடையரின் கைவரிசை

டெல்டா, சங்குவாரி, டெவன் போன்ற தோட்டங்களில் ஏற்கனவே நடந்த வன்செயலின்போது எரிந்த, விழுந்த வீடுகளையும், அகதிகளாகவுள்ள மக்களையும் படம்பிடித்து அப்படங்களைக் காட்டி பொதுத் தேர்தலின் போது வாக்குகளை வாங்கிக் குவித்துக்கொண்ட தொண்டமான் இப்போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு வக்காலத்து வாங்குவதும், அண்மையில் மஸ்கெலியாப் பகுதியில் பிரவுண்லோ தோட்டத்தில் நடைபெற்ற கலவரத்தைச் சென்று பார்த்ததாக பத்திரிகைகள் கூறின. அங்கு எடுக்கப்பட்ட படத்தினைக் காட்டி மலையக மக்களின் தனித் தலைவனென நுவரெலியா மாவட்டத்தில் மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தலுக்கு யூ. என. பி. கட்சியினுடன் சேர்ந்து போட்டியிடும் தலைவரு, மலையக மக்களிடத்தே இனவெறியை அப்போதைக்கு அப்போ ஊட்டக்கூடிய ஒரு சிரித்திடு நரியாக செயல்பட்டுக்கொண்டிருக்கும் தொண்டமான் எதிர்வரும் 'குட்டிப் பொதுத் தேர்தலுக்கு' ஒட்டுக்கேட்பாரா?

பிரவுண்லோ தோட்டத்தைக் காடையர்கள் பலர் 'கெற்றபிலர்' என்னும் நவீன வசதிவாய்ந்த இயந்திரத்துடனும், ரெக்டர், வேன்போன்ற வாகனவசதியுடன் கலவரத்தை ஏற்படுத்துகையில் காலம்தாழ்த்தி வந்துசேர்ந்த பொலிஸ் என்னும் அரசு இயந்திரத்தைக் கட்டிக் காக்கின்றவர்களுடன் சேர்ந்து தேர்தலில் போட்டியிடுவதும் இத்தகைய கலவரங்களின் போது சென்று பார்த்துவிட்டு பத்திரிகைக்கு 'போஸ்' கொடுப்பதன் மூலம் தான் தொழிலாளர் பக்கம் என்பதனை எந்த மலையக தோட்டத் தொழிலாளியும் ஏற்றுக்கொள்ளமாட்டார். அத்துடன் இந்த கலவரத்திற்கு எதிராக இ.தொ.கா. எனும் தொண்டமானின் தொழிற்சங்கமும் காலம்தாழ்த்தியே வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்டது.

"எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஆணைக்குழு நியமிப்பதை தவிர இந்த அரசாங்கத்துக்கு வேறொன்றும் தெரியாது போல" இந்த பிரவுண்லோ பிரச்சினைக்கும் ஜனாதிபதி ஆணைக் குழு மூலம் விசாரணை செய்வதாக தெரியவருகிறது. அத்துடன் பாதிக்கப்பட்டோருக்கு பண வசதியும் செய்கிறதாமே" ஏற்கனவே நடந்த கலவரங்களின்போது ஏற்பட்ட "சன்சோனிக்கமிசன்" என்ன ஆனதோ? அதன் அறிக்கைகள் என்ன ஆனதோ? ஆனால் அந்த ஆணைக்குழு மூலம் பாதிக்கப்பட்டோருக்கு என்ன நலன் கிடைத்தது! அதுபோலவே இந்த ஆணைக் குழுவும் பிரவுண்லோ பிரச்சினையில் பாதிக்கப்பட்டோருக்கு என்ன நலனை வழங்கும்? அதுவும் சன்சோனிக் கமிசன்போல கண்துடைப்புதானே? கலவரத்தில் கற்பு இழந்த பெண்களுக்கு கற்பை ஆணைக்குழுவழங்குமா? இல்லை!

பிரவுண்லோ பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வை மக்கள் எதிர்பார்க்கின்றனர். கண்துடைப்பாக ஆணைக்குழு. நிவாரண நிதியும் வழங்கிவிட்டு இன்னும் இரண்டு ஆண்டில் இன்னும் பிரச்சினையை தார்மீக அரசே ஏற்படுத்தாது என்பதில் என்ன உத்தரவாதம்? எனவே சகல பிரச்சினைக்கும் ஆணைக்குழுவைப் போட்டுவிட்டு "வேதாளம் மீண்டும் முருங்கை ஏறும்" கதையாக இல்லாது இதற்கு ஒரு நியாயமான தீர்வை வழங்க வேண்டும். அத்துடன் இத்தகைய கலவரங்கள் இல்லாமல் தொண்டமானோ அல்லது இ.தொ.கா.வோ, இன்றேல் இந்த அரசோ உயிர்வாழ முடியாது என்பதனாலேயே, இவ்வித கலவரங்கள் மேற்கூறியவர்களினாலேயே ஏற்படுத்தப்படுகின்றன என்பதை மலையக மக்களுக்கு இனிமேலும் மறைக்க முடியாது. ★




# இ. தொ. கா. வின் மற்றொரு சுரண்டல் நிறுவனம்!

இதுவரை பலவழிகளில் மலையக மக்களைச் சுரண்டி சுகபோகமாக தொண்டமான் வாழ தொண்டுசெய்து வருவது இ. தொ. கா. என்ற லிமிட்டெட்டாகும். இது முதலாளிகள் பலரின் பங்குடனும், தொழிலாளர்களின் சந்தாப பணத்திலும் இயங்கிவருகின்றது என்பது எல்லோரும் அறிந்த ஒன்று.

ஆனால் அண்மையில் இந் நிறுவனம் "மலையக பால் உற்பத்தியாளர் சங்கம்" என ஒரு ஸ்தாபனத்தை அமைத்துள்ளது. இது முழுக்க முழுக்க இ. தொ கா வின் பங்குடன் இயங்கிவருகின்றது. இதுவரை தொழிலாளர்களின் சந்தாவிலும் அவர்களின் இரத்தத்திலும் வாழ்ந்து வந்த இ. தொ. க. மேலும் மலையக மக்களை உறிஞ்ச, மற்றொரு வழியில் பால்உற்பத்தியாளர் சங்கத்தின் மூலம் வாய் வைத்துள்ளது.

நிச்சயமாக பெரு மக்களிடம் இலாபத்தைப் பகிர்ந்தளிப்போம் எனக்கூறி பாலை வாங்கிக்கொண்டு மறுநாட் காலையில் நேற்றைய பால் பழுதுபட்டுவிட்டது எனக் கூறி அதை தன் பெயரில் வரவு வைக்கின்றது. உறிஞ்சும் அம்சத்தின் உச்சக் கட்டம் என்பதனை மக்கள் நடைமுறையின் மூலம் உணர்ந்து கொண்டுவருகின்றனர்.

ஆகவே மலையக மக்கள் இத்தகைய சுரண்டலை உணர்ந்து, தமது பாலுக்கு நியாயமான முறையில் விலை கொடுத்து வாங்கும் நோக்கத்துடன் இயங்குகின்ற கூட்டுறவு சங்கங்களைத் தெரிந்து கொண்டு அவற்றின் மூலம் தமது பால விற்பனையைச் செய்வது அவசியமாகும். ★

# தோட்டப் பாடசாலைகளும் தொண்டர் ஆசிரியர்களும்

தோட்டப் பாடசாலைகளை ஏனைய நகர பாடசாலைகள்போல் இயக்க வேண்டும் எனக்கூறி அரசு அனேகமாக தோட்டப் பாடசாலைகளை அரசவுடமை ஆக்கியது. தொண்டமானும் இதற்குத் தூபமிட்டார். ஆனால் தோட்டப் பாடசாலைகள் திறக்கப்பட்டதுதான் தெரியும்: அவை மூடப்பட்டதும் அதே வேகத்தில் நடந்தறின.

தோட்டப்பாடசாலைகள் திறக்கப்பட்டன. அதற்கான ஆசிரியர்கள் உடனடியாக நியமிக்கவில்லை இவ்வாறு பல பாடசாலைகள்மூடப்பட்டன. நகர அரச பாடசாலை ஆசிரியர்கள் சிலர் இவ்வகை பாடசாலைகட்கு நியமிக்கப்பட்டனர். இவ்வாறு நியமிக்கப்பட்ட பலர் இன்று ஆசிரிய பயிற்சிக்கலாசாலை சென்றதும் ஏனைய பல பாடசாலைகள் மூடும் நிலையை அடைந்தன. தோட்டப் பாடசாலைகள் மூடும் நிலையை அடைந்தன. தோட்டப் பாடசாலைகள் அரச சுவீகரிப்புடன் கூடிய பல நிலையங்களில் எடுத்துக்கூறிய சில பத்திரிகைகள் மேற்கூறிய விடயங்களை கூறத் தவறியதுநியாயம்தானே.

மேலும் இவ்வகையாகச் சுவீகரித்த பாடசாலைகளுக்கு தொண்டர் ஆசிரியர்கள் (இலவச ஆசிரியர்கள்) நியமிக்கப்பட்டனர். இவர்களை நிரந்தர ஆசிரியர்களாக நியமிக்க அரசிடம் எந்த நடவடிக்கையும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே இந்த ஆசிரியர்கள் நாளுக்கு நாளைய விலை ஏற்றத்திலும், பஸ்ஸில் ஏற இருக்க, நிற்க, டிக்கட் எடுக்கவேண்டிய நிலையில் வாழ்க்கையை எவ்வாறு நடாத்துவார்கள் என்பது இன்னும் சிதம்பர இரகசியமாகவே காணப்படுகிறது.

பல தோட்டப் பாடசாலைகளுக்கு போதிய ஆசிரியர்களில்லாததும், தளவாடங்களும் கரும்பலகையும் இல்லாமலே பாடங்களும் நடைபெறுகின்றது. ஆசிரியர் இல்லை, தளபாடமில்லை, கரும்பலகையில்லை. எனவே அபிவிருத்தி அரசாங்கத்தின் கல்வி நடவடிக்கையின் மிக உன்னத திட்டத்தினை பெருமையை நடைமுறையில் நாம் மேற்கண்டவாறு கண்டு தெளியக்கூடியதாக இருக்கிறது. பாவம் பாடசாலைகளைக் கோலாகலமாகதிறந்த தொண்டமான் தான் என்ன செய்வார்? அதெல்லாம் வெறும் கண்துடைப்புக்கு அல்லவா? ★

# நியமனத்தில் குளறுபடி

சகல பாடசாலைகளிலும் ஏற்பட்ட ஆசிரியர் பற்றாக்குறையைத் தொடர்ந்து அங்கு தொண்டர் ஆசிரியர்கள்மூலம் நிவர்த்தி செய்யப் பாடசாலை அதிபர்களும், பாடசாலை அபிவிருத்தி சங்கங்களும் முனைந்திருக்கின்றன. இவ்வாறு நியமிப்பதற்கு க. பொ. த. உயர்தர வகுப்பில் சித்தியடைந்தோரும், சாதாரண தரத்தில் சித்தியடைந்தோரும் விரும்பி மனுச்செய்தும், சாதாரண தரத்தில் சித்தியடைந்தோருக்கும், சித்தியே அடையாதோருக்கும், சி. இ. ஒ. வின் சிபாரிசில் இத்தொண்டர் ஆசிரிய பதவி கிடைத்துவிடுகின்றது. உயர்தரத்தில் சித்தியடைந்தோர் புறக்கணிக்கப்படுகின்றனர்.

எனவே இந்த நிலைமைகளில் மிகப்பின்தங்கிய பாடசாலைகள் எவ்வாறு முன்னேற்றமடையும் என்பது கேள்விக்குறி! திறமையிலாதோருக்கு 'சிபாரிசு' என்று வழங்குவதன்மூலம் எதிர்காலத்தில் ஒருசிறந்தவளர்ச்சி நிலையை அடையக் கூடிய மலையகத்தில் இப்போதே முடக்கி விடப்படும் நிலையை உடனடியாக இல்லாமல் செய்தாலே இன்றி மலையகம் வளர்ச்சியடைய நியாயமில்லை.

தொண்டர் ஆசிரியர் நியமனம் அதிபர்களின் கை

(7-ம் பக்கம் பார்க்க)

# தொழிற்சங்க பிரமுகர்களின் போலிச் சமாதானம்

இலங்கையிலுள்ள தொழிலாளர்கள் போராட்டம் நடாத்துவதற்காக இருந்த ஒரே இறுதி ஆயுதமான வேலைநிறுத்த உரிமையைப் பறித்துக்கொண்டது இந்த யூ. என்.பி. அரசாகும்.

அன்று யூ. என். பி. இந்த சட்டத்தைக்கொண்டு வந்தபோது எமது 'மக்கள் மந்திரி' தொண்டமான் உட்பட பல தொழிற்சங்கத் தலைவர்களும் கைகட்டி வாய் பொத்தி பேசாமல் இருந்துவிட்டார்கள்.

அன்று தங்கக்கலைதோட்டத் தொழிலாளர்கள் முன்னுரிமைக்காக போராடிய

(7-ம் பக்கம் பார்க்க)

சென்ற இதழ் தொடர்ச்சி...

# தேசத்தையும் மக்களையும் நேசிக்கக் கற்றுக் கொள்கின்றார்கள்

**கண் பயிற்சி**

இதற்குள் மீண்டும் மணி அடிக்கவே 'மற்றொரு வகுப்பிற்குப் போகலாம் வாருங்கள்' என்று எங்களை வேறு ஒரு வகுப்பிற்கு அழைத்துச் சென்றார் இயக்குனர். அந்த வகுப்பில் உட்கார்ந்துகொண்டிருந்த குழந்தைகள் தங்களுடைய மூடிய கண்களை உள்ளங்கையால் இலேசாகத் தடவிக் கொண்டிருந்தனர். ஒரு சிறுமி — வகுப்பின் மாணவத் தலைவி — அறையைச் சுற்றிவந்து எல்லோரும் ஒழுங்காகக் கண்பயிற்சி செய்கிறார்களா என்று மேற்பார்வை வேலை செய்து கொண்டிருந்தாள்.

நாங்கள் நான்காம் வகுப்பினுள் நுழைந்தபோது அரசியல் பாடம் நடந்துகொண்டிருந்தது. அரசியல் வகுப்பில் என்ன கற்றுக்கொடுப்பீர்கள் என்று கேட்டேன். ''அரசின் கொள்கைத்திட்டம் நாட்டின் நிலைமை இவற்றைப் பற்றி விவாதிப்பார்கள். மேலும், 'ஐந்து விடயங்களை விரும்பு' என்ற தேசிய மட்டத்தில் அனைத்து மாணவர்களுக்கும், ஒரு கோஷம் வைத்திருக்கின்றோம். இதன்படி ஒவ்வொரு மாணவனும், தாய்நாடு, மக்கள், விஞ்ஞானம், உடல் உழைப்பு, பொதுச் சொத்து இவற்றை நேசிக்கக் கற்றுக் கொள்கின்றான். உங்கள் நாட்டை நீங்கள் ஏன் நேசிக்க வேண்டும்? உங்கள் நாட்டின் நிலைமை என்ன? மக்களின் வாழ்க்கை முன்னேறுவதற்கு விஞ்ஞானம் எப்படித் துணை செய்ய முடியும்? என்பது போன்ற கேள்விகளை எழுப்பி வகுப்பில் விவாதிக்கின்றார்கள். இப்படிப்பட்ட விவாதங்கள் மூலம் பல அரசியல், பொருளாதார பிரச்சினைகளை எளிய முறையில் கற்றுக் கொடுக்க முயற்சிக்கிறோம்'' என்றார் திருமதி லூ.

நம் நாட்டுப் பள்ளிகளில் 'மாறல் சயன்ஸ்' என்ற பாடம் இருப்பதுபோல் சீனத்திலும் உண்டு. ஆனால் இங்கு போல் அந்த வகுப்பில் புராணக் கதைகளையோ பழம் பெருமைகளையோ பேசுவதில்லை. ஒவ்வொரு நாளும் ஒரு கால்மணிநேரம் ஆசிரியர்களும், மாணவர்களும் சேர்ந்து சிறந்த மாணவன் அல்லது மாணவி யார் என்பது பற்றி விவாதிக்கிறார்கள். பல அன்றாட சந்தர்ப்பங்களில் மாணவர்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்றும் பேசுகிறார்கள். சிறந்தமாணவனுக்கு ஒரு உதாரணம் சொன்னார் இயக்குனர். 'சிலநாட்களுக்கு முன் ஒருமாணவன் தெருவில்விழுந்திருந்த ஒரு பர்ஸை எடுத்து திறந்து பார்த்ததில் அதில் 40 யுவான் (ரூ.200) இருந்தது. பர்சின் சொந்தக்காரர் வேலை செய்யும் தொழிற்சாலையின் விலாசமும் அதில் இருந்ததால் அந்த மாணவன் உடனே தொழிற்சாலையைத் தேடிப்பிடித்து நிர்வாகத்தினரிடம் பர்ஸை ஒப்படைத்து விட்டான்' இந்த சிறுவனின் செயலைப் பாராட்டிய பள்ளி மாணவர்கள் கரும்பலகையில் 'கட்டுரை' எழுதி அவனைக் கௌரவித்தார்கள்.

**— மைதிலி சிவராமன் —**
**(இந்திய மாதர் ஜனநாயக முன்னணி)**

**மாடல் மாணவன்**

தொழிற்சாலைகளில் முன்னணித் தொழிலாளி தேர்ந்தெடுப்பதுபோல் பள்ளிகளிலும் செய்கின்றனர். படிப்பில் முன்நிற்பதோடு மட்டுமல்லாமல் மரம் நடுவது சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைப்பது போன்ற பயனுள்ள சமூகப்பணிகளில் ஈடுபடுபவர்கள் 'மாடல் மாணவர்' என அழைக்கப்படுகிறார்கள். திறமை வாய்ந்த குழந்தைகள் தாங்கள் நன்றாகப் படித்து முதல்மார்க் வாங்கவேண்டும் என்று மட்டும் விரும்பாமல் பின்தங்கிய மாணவர்களுக்கு உதவவேண்டும் என்ற மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளும் வகையில் சீனக் கல்விமுறை அமைந்திருக்கின்றது. ஒரு மாணவன் நோய் வாய்ப்பட்டு பள்ளிக்கு வர இயலாத நிலையிலிருந்தால் அவன்வீட்டுக்கோ மருத்துவ மனைக்கோ ஆசிரியரும் மாணவர்களும் சென்று அவனுக்கு பாடம் கற்பிக்கிறார்கள். இத்தகைய செயல்களை மாணவர்கள் பிறருக்குச் செய்யும் பேருபகாரம் என்று கருதாமல் அவர்களின் கடமை என்றே நினைக்கிறார்கள்.

## மாணவர் ஆசிரியரை மதிக்கின்றனர்

## ஆசிரியர் மாணவரை நேசிக்கின்றனர்

வகுப்பு நேரத்திற்குபிறகு மாலையில் மாணவர்களுக்காக பலவித பொழுதுபோக்கு பயிற்சி நடவடிக்கைகள் உள்ளன. மாணவர்களின் திறமை ஆர்வம் இவற்றைப் பொறுத்தே அவர்களுக்கு இலக்கியம் ஓவியம், விளையாட்டு, வாய்ப்பாட்டு, வாத்திய இசை நாட்டியம், விஞ்ஞானம் தொழில் நுட்பம் போன்ற பல துறைகளில் பயிற்சி கொடுக்கின்றனர்.

**தனியார் பள்ளிகளே இல்லை**

அடுத்து பள்ளி நிர்வாகம் பற்றிய கேள்வியை எழுப்பினேன். 'பள்ளியின் நிர்வாகி யார், நிர்வாகத்திற்கும் ஆசிரியர்களுக்கும் என்ன உறவு?'

சீனத்தில் தனியார்பள்ளிகளே கிடையாது. எல்லாப் பள்ளிகளும் கல்வி இலாகாவின் திட்டப்படி செயற்படும். டாய்குவான் துவக்கப் பள்ளியில் பணியாற்றும் ஏழு ஊழியர்களைக் கொண்ட ஒரு முன்னணி அமைப்பு அல்லது குழு அன்றாட நிர்வாகத்திற்கு பொறுப்பானது. இந்தப் பள்ளியின் சீனக்கம்யூனிஸ்டுக்கட்சிக் கிளையின் செயலாளர் தான் முன்னணிக்குழுவின் செயலாளரும் பள்ளியின இயக்குனர் ஆவார். இத்தகைய அமைப்பில் ஆசிரியர்கள் வேறு, நிர்வாகம் வேறு என்ற கருத்து ஏற்படவாய்ப்பில்லை என்று ஆசிரியர்கள் விளக்கினார்கள்.

'நீங்கள் சொல்வது புரிகிறது. இருந்தாலும் ஆசிரியர்களின் ஊதியம், வேலை, சூழ்நிலை இவை குறித்துப் பிரச்சனைகள், போராட்டம் எல்லாம் உருவானதில்லையா? என்றேன்.

என் கேள்வியின் மொழிபெயர்ப்பைக் கேட்டு ஆசிரிகள் சிரித்தனர். இக்குனர் ஆசிரியர்களோடு கலந்துவிவாதித்துவிட்டு பதிலளித்தனர். ஆசிரியர்களின் ஊதியம், வேலை நிலைமை இவையெல்லாம் தேசியமட்டத்தில் நிர்ணயிக்கப்படுகிறது. இதற்காகப் போராட்டம் தேவையில்லை. ஒரு ஆசிரியரின் சராசரி ஊதியம் 50யுவான். (ரூ.250). பல ஆண்டுகளுக்குப்பின் சில உணவுப் பண்டங்களின் விலைகளை அரசு சமீபத்தில் ஏற்றியது. இதை ஈடுகட்டுவதற்காக இப்போது அனைத்து ஊழியர்களுக்கும் 5 யுவான் (ரூ.25) கூடுதலாக ஊதியம் கொடுக்கப்படுகிறது.

இயக்குனர் பேசி முடித்ததும் ஒரு ஆசிரியை சொன்னார், ''ஆசிரியர்களின் ஊதியத்தைக் கேட்டு இது மிகவும் குறைவாக உள்ளதே என்று நினைக்கிறீர்களா? பல வெளிநாட்டு விருந்தினர்களும் அப்படித்தான் நினைக்கிறார்கள். ஆனால் உங்களுக்குச் சில விடயங்களை நினைவுறுத்த விரும்புகிறேன். எங்கள் நாட்டில் கணவன்—மனைவி இருவரும் வேலைசெய்கின்றார்கள். மேலும் அரசே விலைவாசிகளை நிர்ணயிப்பதால் விலைவாசி உயர்வு என்பது எங்களைப் பாதிப்பதில்லை. வீட்டு வாடகையும் ஊதியத்தில் ஏழரைச்சதம் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மருத்துவ வசதியும் இலவசமே! அனைத்து ஊழியர்களுக்கும் இறுதி ஊதியத்தில் எழுபத்தைந்து சதம் ஓய்வுகால ஊழியமாக கிடைக்கிறது. மேலும் ஆசிரியர்களின் குடும்பசூழ்நிலைக்கேற்ப அவர்கள் அரசின் உதவியைக் கடனாகப் பெறலாம். இந்தப் பின்னணியில் பார்த்தால் ஆசிரியர்களின் ஊதியம் போதுமானதே.

**பிரதான குறிக்கோள்**

பள்ளியை சுற்றிபார்த்து ஆசிரியர்களோடு பேசிக் கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை இனியும் அவர்கள் நேரத்தை வீணாக்கக்கூடாது என்று அவர்களிடம் விடைபெறும்போது இறுதியாக 'உங்கள் பள்ளியின் பிரதான குறிக்கோள் அல்லது இலட்சியம் என்பது பற்றி ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?' என்றேன்.

இரண்டு அம்சங்களை குறிப்பிட விரும்புவதாக இயக்குனர் கூறினார். ''கல்விபோதனை என்றபெயரால் குருட்டாட்ட போக்கில் மாணவர்கள் மீது படிப்பைச் சுமத்தாமல் அறிவு பூர்வமாக பிரச்சினைகளை ஆய்ந்து தீர்வு காணவும், விமர்சனப் பார்வையோடு வாழ்க்கையை அணுகவும் கற்றுக் கொடுப்பதையே எங்கள் இலட்சியமாகக் கொண்டிருக்கிறோம்''. இந்த அடிப்படையில் கல்வி போதிக்கும் முறைகளைப் பற்றி நாங்கள் எங்கள் பள்ளியில் ஆய்வும் நடத்திக் கொண்டிருக்கிறோம் என்றனர்.

'அடுத்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே ஒரு செழுமையான உறவை ஏற்படுத்த விரும்புகின்றோம். பழைய சமுதாயத்தில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே பெரும் இடைவெளி இருந்தது. கலாச்சாரப் புரட்சி காலத்தில் இந்த உறவு மிகவும் சீர்கெட்டுப்போயிற்று, சமீப காலத்தில் மீண்டும் மாணவர்களும் ஆசிரியர்களும் மனம் திறந்து பேசிக்கொள்ளும் நட்புறவு ஏற்பட்டிருக்கிறது. அன்புக்குரிய எங்கள் முன்னாள் பிரதமர் சூ என்லாய் கூறியது போல் ''மாணவர்கள் ஆசிரியரை மதிக்கவேண்டும்; ஆசிரியர்கள் மாணவர்களை நேசிக்க வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள்'' இதற்காகவே பாடுபடுகின்றோம் என்றார்.

நன்றி:
'செம்மலர்'
(இந்திய சஞ்சிகை)

---

# தத்துவார்த்த ஒழுக்கப் போதனை

ஒழுங்குபடுத்தப் பட்ட பாடநெறியின் ஒருபகுதியாக சீனாவின் சகல ஆரம்ப பாடசாலைகளிலும் தத்துவார்த்த ஒழுக்கப் போதனைகள் புகுத்தப்படவுள்ளன என்ற சுற்று நிருபம் ஒன்று சகல கல்வித் திணைக்களங்கட்கும் சீன கல்வி அமைச்சினால் அனுப்பப்பட்டுள்ளது.

சிறுவர்களை ஒழுக்கமாகவும், புத்திக்கூர்மையுள்ளவர்களாகவும் தேகாரோக்கியம் உள்ளவர்களாகவும் வளர்க்க வேண்டுமென்ற கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையை வெற்றியடையச் செய்வதற்கு தத்துவார்த்த ஒழுக்கப்போதனையின் அவசியத்தை சுற்றறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

ஆரம்பப் பாடசாலைகள் பின்வருவனவற்றிற்கு அழுத்தம் கொடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.

★ கம்யூனிசத்தின் உன்னத இலட்சியங்களுக்கும், சீனாவின் நவீனமயத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் கடினமாகக் கற்கவேண்டும்.

★ கம்யூனிஸ்ட் கட்சி மீதும் தாய்நாட்டின் மீதும் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருத்தல் வேண்டும்.

★ மக்களுக்கு மனப்பூர்வமாகச் சேவை செய்வதற்கும் மக்கள் நலன்களைப் பாதுகாப்பதற்கும் தயாராயிருத்தல்வேண்டும்.

★ உழைப்பில் நாட்டம், சிக்கனத்தைக் கடைப் பிடித்தல், நேர்மை, அடக்கம், கடின உழைப்பு எளிமையானவாழ்க்கை ஆகியவற்றைக் கடைப் பிடித்தல்

★ கட்டுப்பாடு, சட்டம், பொது ஒழுங்கிற்கு மதிப்பு பொதுச் சொத்தின்மீது அக்கறை, மற்றவர்களுக்கு உதவி செய்வதில் மகிழ்ச்சியாயிருப்பது.

இளஞ்சிறார்களுக்கு ஏற்ற விதத்தில் நேரடி உதாரணங்கள்மூலம் உணர்வுபூர்வமான முறையில் இந்த ஒழுக்கப் போதனை அமைந்திருத்தல் வேண்டுமென சுற்றறிக்கை கூறுகிறது.

★

---

## 3-ம் பக்கத் தொடர் தோட்டத்தொழிலாளரின்...

தொழிலாளரைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என்பதே நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள். இவர்கள் அமைச்சர்களாக வருவதற்கு மட்டும் தோட்டத் தொழிலாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

எம்மைப் பொறுத்த மட்டில் மாதச் சம்பளத்திற்கு, ஏனையோருக்கு வழங்கப்பட்ட 70ரூபா அதிகரிப்பு, ஆண்—பெண் சமசம்பளம், தேயிலை—றபர் தொழிலாளர்களுக்குச் சமசம்பளம் மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்காக எந்த அரசாங்கம் அதிகாரத்தில் இருந்தாலும் போராடுவோம்; இந்தக் கோரிக்கைகள் அனைத்தும் வழங்கப்பட்டாலும் எந்த அரசாங்கத்திற்கும் நாம் பந்தம் பிடிக்கமாட்டோம். இந்த நாட்டில் தொழிலாளர்களுக்கு விடுதலை அமைக்கக் கூடிய தொழிலாளர் அரசாங்கம் ஸ்தாபிக்கப்படும்வரை நாம் எந்த அரசாங்கத்திலும் அங்கம் வகிக்கமாட்டோம் என்பதையும் தோட்டத் தொழிலாளர்கள் கவனத்தில் கொள்வது அவசியம்.

# சோவியத்-அமெரிக்க மேலாதிக்கப் போட்டியால் உலக யுத்த ஆபத்து!

மூன்றாவது மண்டல நாடுகளிலே இராணுவ சதிப் புரட்சிகள், இராணுவ செலவுகளிலே மிகுந்த அதிகரிப்பு என்பன தற்சமயம் காணப்படுகிறது. இவை மேலாதிக்க வல்லரசுகளிடையே நிலவிவந்திருக்கும் போட்டா போட்டி வேகம் பெற்றிருப்பதைக் காட்டுகின்றன. வியத்நாமிலே அமெரிக்கா தோல்வியடைந்து இந்தோசீன பிராந்தியத்திலிருந்து படைகளை வாபஸ் பெற்றுக்கொண்ட காலத்திலிருந்து மிகச் சமீப காலம்வரை அமெரிக்கா சற்று அடங்கியிருப்பதுபோல நடந்துகொண்டது. அமெரிக்கப் பொருளாதாரப் பிரச்சினைகளும் அரசியல் தலைமையில் உறுதிப்பாடு இன்மையும் தற்காலிக மந்த நிலையை உண்டாக்கியிருந்தன. இந்த மந்த நிலை சுமார் பத்தாண்டுகள் நிலவியது என்று கூறலாம். இந்த நிலைமையைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திய ரஷ்யா மூன்று கண்டங்களில் — அதாவது ஆசியா ஆபிரிக்கா, தென்னமெரிக்கா கண்டங்களில் வெகுவேகமாக ஊடுருவி தனக்குப் பணிந்து நடக்கக்கூடிய குழுக்களைச் சிற்சில நாடுகளிலே பதவியில் அமர்த்தியது; இராணுவ தளபாடங்களின் விற்பனையையும் விநியோகத்தையும் விஸ்தரித்தது; அப்பட்டமான ஆக்கிரமிப்புக்களில் இறங்கியது. இது அமெரிக்காவிலே பாரதூரமான எதிர் விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. இராணுவரீதியிலான பலப் பரீட்சை இப்பொழுது மீண்டும் ஆரம்பித்துள்ளது. கெடுபிடி யுத்தத்துக்குரிய அம்சங்கள் தலைதூக்கியிருக்கின்றன. தரையிலும் கடலிலும் அமெரிக்க ரஷ்ய படைகள் எட்டிக்குப் போட்டியாக இயங்கி வருவதைக் காணலாம்.

இந்த பின்னணியிலேயே அமெரிக்கா தனது இராணுவச் செலவுகளை என்றுமில்லாதவாறு திடீரென அதிகரித்துள்ளது. இவ்வாண்டு ஆயிரத்து எழுநூற்றி எண்பது கோடி டொலர்கள் அமெரிக்க பாதுகாப்புக்குச் செலவிடப்படும். அடுத்த வருடம் இரண்டாயிரத்து இருநூற்றி இருபது கோடி டொலர் செலவிடப்படும் எனத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. இந்த வீதத்தில் சென்றால் ஐந்து வருடத்தில் பதின்மூவாயிரம் கோடி டொலர் இராணுவத்திற்குச் செலவிடப்படும்.

கடந்த சில வருடங்களாக ரஷ்யா செலவுசெய்தது தற்குப் போட்டியாகவே இத்தகைய பிரமாண்டமான செலவு மேற்கொள்ளப்படுகிறது என்று அமெரிக்கபாதுகாப்பு மந்திரி கஸ்பார் வெயின்பெர்கர் கூறியுள்ளபோதிலும் இது உலகத்தை யுத்த அபாயத்துக்கு இழுத்துச்செல்லத் தொடங்கியிருக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது. வெயின்பெர்கரின் உரைக்கு எதிரொலியாக பிரெஷ்நெவ் அண்மையில் ரஷ்ய மக்கள் பிரதிநிதிகள் சபையில் உரையாற்றும்பொழுது அமெரிக்கா இராணுவத் தளபாடங்களில் மேலாதிக்கம் பெறுவதைத் தனது தேசம் ஒருபோதும் அநுமதிக்க முடியாது என்று கூறினர். வெறும் பேச்சுக்களாக மட்டுமன்றி நடைமுறையில் வல்லரசுகளுக்கிடையிலான போட்டா போட்டி இப்பொழுது மிகத்தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இத்தகைய போட்டா போட்டிக்கு நடுநிலைமை நாடுகள் — அதாவது — அணிசேரா நாடுகள் — பலத்த எதிர்ப்பை காட்டி வருவதினுலே இரு வல்லரசுகளும் நான் முந்தி, நீ முந்தி என்ற மனப்பான்மையுடன்; இம்மூன்றாவது மண்டல நாடுகளிலே இயன்றவரை, குழப்பத்தையும், ஸ்திரமின்மையையும் ஏற்படுத்த முயன்று வருகின்றன. ஏற்கனவே வலதுசாரி அரசாங்கங்கள் பதவியிலிருக்கும் நாடுகளில்கூட இராணுவ ஆட்சிகளை நிறுவுவதற்கு அமெரிக்கா முனைந்துள்ளது. தென்கொரியா, பாகிஸ்தான், தாய்லாந்து, எல்சல்வடோர் முதலிய நாடுகளில் அமெரிக்காவின் கைங்கரியங்களைக் காணக்கூடியதாய் இருக்கின்றது. அணிசேரா நாடுகளின் ஒற்றுமையைக் குலைத்துத் தனக்கு லால்பிடிக்கக் கூடிய சில தேசங்களை தனது செல்வாக்கிற்குள் வைத்திருக்க ரஷ்யா பெரும்பாடுபடுகிறது. இந்தியா, சிரியா, வியத்நாம், கியூபா முதலிய வால்பிடிகள் இதற்கு ஒத்தாசைபுரிகின்றன. இப்படி வல்லரசுகளின் போட்டா போட்டி அமைதியையும் உண்மையான அபிவிருத்தியையும் விரும்பும் வறிய, சிறிய நாடுகளைப் பெரிதும் பாதிக்கிறது. மூன்றாவது மண்டல நாடுகளிலே மக்கள் இயக்கங்களும் புரட்சிகர இயக்கங்களும் வலுவடைந்தாலன்றி, இந்த ஏகாதிபத்திய ஆபத்தைத் தடுக்க முடியாது.

சமாதான காலத்திலே அமெரிக்காபோன்ற கைத்தொழில் நாடுகள் இவ்வாறு இராணுவ செலவினங்களை அதிகரிப்பது அந்நாடுகளின் பொருளாதாரத்தை மட்டுமன்றி உலகின் பொருளாதாரத்தையும் குழப்பமடையச் செய்யும் என்பதில் ஐயமில்லை. பிரசித்தி பெற்ற அமெரிக்க பொருளாதார விமர்சகர் ஒருவர் சமீபத்தில் கூறினர். இது மேலும் பணவீக்கத்தையே உண்டு பண்ணும்; ஏற்றத் தாழ்வுகளை அதிகரிக்கும்; வட்டி வீதங்களை உயர்த்தும்; இறுதியில் உற்பத்தியை வீழ்ச்சியடையச் செய்யும்". இதன் விளைவுகள் உலக மக்களைத் தான் பாதிக்கும்.

★

# போதைப் பொருட்களில் சிக்கித்தவிக்கும் மேற்குலகம்

ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகள் ஆசியாவிலே தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட முற்பட்ட நூற்றுண்டுகளிலே, குறிப்பாக பதினேழாம் பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றுண்டுகளிலே பல வஞ்சக நடவடிக்கைகளில் ஈடுபட்டன. அவற்றுள் ஒன்று சீனு போன்ற நாடுகளிலே அபின், கஞ்சா முதலிய போதைப் பொருள்களை பெரும் அளவில் விற்று இலாபம் சம்பாதித்ததாகும். ஆங்கிலேயரும் அமெரிக்கரும் இதில் முன்னின்றனர். அபின் விற்பதற்கென்றே சீனுவில் ஆக்கிரமிப்பு யுத்தங்களை இங்கிலாந்தும் அமெரிக்காவும் மேற்கொண்டன. 1840 — 49 காலப்பகுதியை அபின் யுத்த காலம் என்று சீனவரலாற்று ஆசிரியர்கள் கூறுவது வழக்கம். அபின் வியாபாரத்தை எதிர்த்த தேசபக்தர்களின் போராட்டமே பிற்காலத்தில் கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கு ஆதாரமாக அமைந்தது.

கால ஓட்டத்தில் சக்கரம் சுழன்று இப்பொழுது மேற்கு உலகில் போதைப் பொருள் வியாபாரமும், பாவிப்பும் பிரமாண்டமான நிலையை எய்தியிருக்கின்றன. லண்டன், பாரிஸ், நியூயோர்க் ஹம்பெர்க், அம்ஸ்டர்டம் முதலிய மேற்குலக நகரங்களில் போதை அரக்கன் சொகுசு நடைபோட்டு உலவுகிறுன். முதலாளித்துவ மேற்குலகம் இன்று போதைப் பொருட்களுக்கு அடிமைப்பட்டு வருகிறது என்று துணிந்து கூறலாம்.

உலக சுகாதார நிறுவனம் அண்மையில் வெளியிட்டிருக்கும் அறிக்கை ஒன்றின் படி. அமெரிக்காவிலே சுமார் நான்கு கோடி மக்கள் போதைப் பொருளுக்கு அடிமைப்பட்டவர்களாக இருக்கின்றனர். மேற்கு ஜெர்மனியிலே வருடாவருடம் சராசரி 200 கோடி மார்க் போதைப்பொருளுக்கு செலவிடப்படுகிறதாம்.

மேற்கு நாடுகளிலே போதைப் பொருட்களை உட்கொள்வோர் குறிப்பிட்ட எந்த ஒரு சமூக மட்டத்தையும் சேர்ந்தவர்கள் அல்ல. ஆயினும் பெரும்பாலானோர் வாலிபப் பிராயத்தைச்சேர்ந்தவர்கள். இவ்வாறு கோடிக்கணக்கானோர் தமது பணத்தையும், உடல் நலத்தையும் வீண்விரயம் செய்வதற்குக் காரணம் என்ன? போதைப் பொருள் உட்கொள்ளல் ஒரு சமுதாயப் பிரச்சினையாகும். விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மேற்கத்திய உலகிலே வாழ்க்கைத் தரத்தையும், பொருள்வளத்தையும் பெருமளவுக்கு உயர்த்தியிருப்பது உண்மையே ஆனுல் அந்த அளவுக்கு ஆன்மீக ஒழுக்க நியதிகள் பேணப்படவில்லை. மேற்கத்திய நாடுகள் குறிப்பாக அமெரிக்கா சந்திரனில் மனிதனை உலவவிட்டது ஆனுல் போதைப் பொருள் அரக்கன் மண்ணுலகில் மக்களை அழித்துவருகிறுன். முதலாளித்துவ நாடுகளிலே கடைகளில் பாவனைப் பொருள்கள் நிரம்பிவழிவது உண்மை. ஆனுல் குற்றச் செயல்களும் மிக அதிகமாக உள்ளன. இத்தகைய மோசமான முரண்பாடுகள் முதலாளித்துவ சமுதாயத்தின் தவிர்க்க இயலாத நியதிகளாகும். இலங்கையில் இந்த நீசநிலையையே யூ. என். பி. அரசு நிலைநாட்டி விடுவதென கங்கணம்கட்டிக் கொண்டிருக்கிறது. இறக்குமதி அதிகரிக்க வறுமையும் அதிகரிக்கிறது. மேற்கத்திய சமூகம் மனநோயால் பீடிக்கப்பெற்ற ஒன்றாகும். செல்வத்தின் மத்தியில் போதைப்பொருளால் சிறிது நேர மேலதிக இன்பத்தைப் பெற பலர் முனைகின்றனர். வறுமையில்வாடும் வெகுஜனங்களோ கவலையைமறக்க ஒருகணம் போதைப்பொருளை நாடுகின்றனர். தமிழ் நாட்டில் சினிமா ஒருவிதமான போதைப் பொருள்தான். போதைப்பொருள் பெரும் இலாபம் தரும் வியாபாரம் என்பதால் அதனுலே கோடீஸ்வரராயிருப்போரும் பலர். முதலாளித்துவ சமுதாயத்தின் அவலம் இது.

★

# உலக அரங்கில்

அங்கும் இங்கும்

## வியட்னும் ஆக்கிரமிப்பாளர் பின்வாங்குகின்றனர்

இந்தப் பகுதியில் நாம் முன்னரும் அடிக்கடி எழுதியிருந்ததுபோல கம்பூச்சியாவிலே தேசபக்தர்களின விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்து வருகிறது. கம்யூனிஸ்டு, தேசபக்த ஜனநாயக சக்திகள் ஒன்றுபட்டதன் பயனுக இராணுவ ரீதியிலான எதிர்ப்பு தற்சமயம் உறுதி பெற்றுள்ளது. கடந்த சில வாரங்களில் மாத்திரம் மூன்று மாவட்டங்களில் கம்பூச்சிய தேசிய இராணுவமும் கொரில்லாப் படையினரும் சுமார் இருநூறு வியத்நாமிய ஆக்கிரமிப்பாளரைக் கொன்றனர் என்று தெரியவருகிறது.

இத்தாக்குதல்கள் புதிய சக்தியும் வேகமும் பெற்றதற்கு எடுத்துக்காட்டாக இவை வியத்நாமியஇராணுவ முகாம்கள்மீதும், பலம்வாய்ந்த தளங்கள்மீதும் நடத்தப்பதவதை அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர். வியத்நாமிய ஆக்கிரமிப்புப் படைகளுக்குப் பெருந்தலையிடியாயிருப்பது போக்குவரத்துத் தடைகளாகும். இரவில் மாத்திரம் அன்றி பகலிலும்கூட பல மாவட்டங்களில் வியத்நாமிய இராணுவத்தினர் பலத்த பந்தோபஸ்து இல்லாமல் பிரயாணம் செய்ய முடியாதநிலை தோன்றியுள்ளதாம். சில இடங்களில் புகையிரத சேவை சில நாட்களுக்குத் துண்டிக்கப்பட்டுள்ளது. வியத்நாமியரின் தோல்வி வெகு தூரத்தில் இல்லை என்பதையே இந்நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றன.

★

## தொழிற்சங்கப்...

5-ம் பக்கத் தொடர்......

போது பொலீசுகளால் இனவாதிகள் என்று நையப்புடைக்கப்பட்டனர். இதே மாதிரியான ஒருநிலைதான் லிண்டுலை டிலிகுல்ட்டிரிதோட்டத்திலும் இன்று நடந்திருக்கின்றது. அன்று வெள்ளைக்காரன் காலத்திலிருந்தே திருவிழா நடாத்தும் நாட்களில் இரண்டு மணிக்கு வேலை விடுவார்கள். பரம்பரையாக தோட்ட நிர்வாகங்கள் இதற்கு இணங்கி வந்துள்ளன. ஆனுல் எங்கள் தோட்டத்தில் இம்முறை அரைநாள் வேலையை நிர்வாகம் மறுத்ததால் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்தார்கள். ஆனுல் இவர்கள் சில தொழிற்சங்க பிரமுகர்களால் தப்பாக வழிநடாத்தி செல்லப்பட்டார்கள். அதன் விளைவாக தற்போது இத்தோட்டத்தில் ஒரு ஆண் தொழிலாளிகூட இல்லை; காவல்நாய்களின் அட்டகாசத்திற்கு தலைமறைவாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

சகல தோட்டத் தொழிலாளர்களும் இதுபற்றி சிந்திக்கவேண்டும்; தொழிற்சங்க பத்திரிகைகளிலோ 50 ஆயிரம்பேர் வேலை நிறுத்தம் — பிரச்சனைக்கு சமூக தீர்வு என்று கொட்டை எழுத்துக்களில் பொறித்து விடுகிறுர்கள். ஆனுல் இன்றுவரையிலும் இங்கு ஒரு பொலிஸ்கேம்ப் அமைக்கப்பட்டிருப்பதால் ஒரு ஆண் தொழிலாளிகூட தோட்டத்தினுள் செல்ல முடியவில்லை.

இதில் வேடிக்கை என்னவெனில் அன்று அத்தியாவசிய சேவைகள் சட்டம் கொண்டுவரும்போது வாளாவிருந்த தொழிற்சங்கங்கள் இன்று வேலை நிறுத்தத்தில் குதிக்கச்சொல்கின்றனர். அவர்களின் பச்சோந்தித்தனத்தைநாம் அறியமாட்டோமா?

அன்று இந்த அடக்குமுறைச் சட்டத்திற்கெதிராக வேலை நிறுத்தம் செய்யச் சொல்லி இருக்கலாமே. அல்லது ரூபா 70/- சம்பளவுயர்வுக்குவேலைநிறுத்தத்திலிறங்க கோரிக்கை விட்டிருக்கலாமே —ஏதோ சனுதிபதி கமிஷனுடன் கதைத்தார்கள்; சுமூகமான முடிவாம் என்ன கழுத்தறுப்போ

இவர்களின் இந்த மாய மந்திர ஜால வித்தைகள் எல்லாம் பல தோட்டத் தொழிலாளர்களுக்கு வெளிச்சமாகிக்கொண்டு வருகின்றது.

## நியமனத்தில் குளறுபடி

5-ம் பக்கத் தொடர்......

யில் விடப்பட்டபோதும் அதிபர்களின் கையில் விடப்பட்டபோதும் அதிபர்கள் சில தெரிந்த முகங்களுக்கும், சில மஞ்சள் முகங்களுக்கும் திறமையைவிட பொரிசில் தொண்டர் ஆசிரியர்களாக்க எத்தனிக்கும்வேளையில், திறமையுடையோருக்கு "முடிந்தால் சி. இ. ஒ. விடம் கதைத்து பாருங்கள்'' எனக் கூறி மழுப்புவிடுகின்றனர்.

இலங்கையில் மிக அதிகமான குறைபாடுகள் மலிந்த கல்வித்துறையின் குளறுபடிகளுக்கு இவை சான்று பகர்கின்றன. எனவே சகல தொண்டர் ஆசிரிய சங்கங்களும் இவ்வகைப் பிரச்சினையில் உடன்தீர்வுபெற ஓரணியில் திரளவேண்டும்.

# நாட்டை நாசப்படுத்துவதே அரசின் கொள்கை;

# கூட்டணி ஒருபோதும் யூ.என்.பி.யை எதிர்க்காது

நமது நாட்டில் இன்னும் சில வருடங்களில் அரசாங்க பொதுத்துறை என்றோ அன்றி மக்களின் கூட்டுறவுத் துறை என்றோ எதுவுமே இருக்காது. அந்தளவு தூரத்திற்கு யூ. என். பி. ஆட்சி சகல அரசாங்க பொதுத்துறைகளையும் அந்நிய-உள்நாட்டு முதலாளிகளின் கைகளில் ஒப்படைத்து வருகின்றது. இத்தகைய நடவடிக்கை அத்துறைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் — ஊழியர்களுக்கு மட்டுமன்றி, முழுநாட்டின் பொருளாதாரத்தையும் நாசமாக்கும் செயலாகும்.

மேற்கண்டவாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) வடபிரதேசச் செயலாளர் தோழர் கே. செந்திவேல் யாழ். றிம்மர் மண்டபத்தில் '' இன்றைய அரசியல் நிலையும் அதன் எதிர் காலமும் '' என்னும் தலைப்பில் நடைபெற்ற பகிரங்கக் கருத்தரங்கில் உரையாற்றும்போது கூறினர்.

தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றமேற்படி கருத்தரங்கில் தோழர் செந்தில் தொடர்ந்தும் பேசுகையில், ஒருகாலத்தில் நமது நாட்டின் பலதுறைகள் தனி முதலாளிகளினதும், கம்பனிகளினதும் கைகளில் சிக்கியிருந்தன, அதன்மூலம் நாட்டுக்கோ, மக்களுக்கோ அன்றி அத்துறைகளில் வேலை செய்த தொழிலாளர்களுக்கோ எவ்வித பலாபலனும் கிடைக்கவில்லை. ஆதலால் அத்துறைகளை அரசாங்க பொதுத்துறைகளாக்கவேண்டும் என்ற மக்களின் குரல் ஓங்கியது. மக்களது நீண்டநாள் போராட்டங்களினுலேயே தனியார் துறைகள் பல அரசாங்க பொதுத்துறைகளாக மாற்றப்பட்டன. ஆனுல் இன்று மக்களின் அபிலாஷைகளை அப்பட்டமாகவே மறுத்து மீண்டும் தனிமுதலாளிகளினதும், கம்பனிகளினதும் அபிலாஷைகளை நிறைவேற்றும் விதத்தில் அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இத்தகைய நடவடிக்கைகளை வெறுங் கண்டனங்களுடன் நிறுத்திக்கொள்ளாது மக்களை அணிதிரட்டி அவ்வாருன மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராடுவது அவசியமாகும்.

## யாழ்-கருத்தரங்கில் தோழர் செந்தில்

அவர் மேலும் பேசுகையில் தமிழர் கூட்டணியினர் தாமும் யூ. என் பி. எதிர்ப்பாளர்கள் எனத்தமிழ்மக்களையும் அதேபோல் சிங்கள மக்களையும் ஏமாற்றுகின்றனர். ஆனுல் உண்மையாகவே கூட்டணியினர் அசல் யூ. என். பி. ஆதரவாளர்கள் என்பதைக் கடந்த மூன்ருண்டுகளுக்குமேலான நடவடிக்கைகள் தெளிவாக்கியுள்ளன. விரைவிலேயே யூ. என. பி. மிக இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படும்கட்டத்தில் தமிழர் கூட்டணி நிச்சயம் யூ. என். பிக்கு உதவும் வகையில் நடந்துகொள்வதைத்தான் தமிழ்மக்கள் மட்டுமன்றி சிங்களமக்களும் கண்டுகொள்வர். இன்று தாம் ஐந்துகட்சிக் கூட்டில் இருப்பதாகக் கூறுவது வெறும் சந்தர்ப்பவாதக் கண்துடைப்பே அன்றி நேர்மையான யூ.என்.பி. எதிர்ப்பு அல்ல என்பதையும் உண்மையான யூ. என். பி. எதிர்ப்புச் சக்திகள் உணர்ந்துகொள்வது அவசியம் என்றும் கூறினர்.

மேலும் இக் கருத்தரங்கில் உழைக்கும் மக்கள் கட்சியின் பொதுச்செயலாளர்எச், எல். கே. கரவிட்ட, இலங்கை தேசபக்த வாலிபர் இயக்கத்தின் வடபிரதேசக்கமிட்டியின் சார்பில் தோழர்கள் வை. வன்னியசிங்கம், சோ. தேவராஜா ஆகியோரும் உரையாற்றினர்.

(மேற்படி கருத்தரங்கில் உரையாற்றிய தோழர் கரவிட்ட அவர்களின் உரையின் சுருக்கம் அடுத்த இதழில் வெளிவரும்)

## ஊர்வலம் தொடர்கிறது!

அகன்ற விழிகளில் ஆத்திரப் பொறிகள்
அகிலத்துத் தீமைகள் அனைத்தையும் பொசுக்க
ஓங்கிய கரங்களில் இறுகிய முஷ்டிகள்
அடிமை விலங்கினை அறுத்திடத் துடிக்க
வானைப் பிளந்து எழுந்திடும் கோஷங்கள்
கூனிக் குறுகிய மாந்தர்தம் உள்ளத்து
கூன்களை நிமிர்த்தி ஓரணி சேர்க்க
மேதின ஊர்வலம் தொடர்கிறது.

சுரண்டல் உலகில் தொடங்கிய நாள்முதல்
சுதந்திர மிழந்து வருந்திய மக்கள்
இழந்த வாழ்வைப் பெறுவதற் காக
இரத்தம் சிந்திச் சிவந்த பாதையில்
எழுந்த செங்கொடி ஏந்திய கரங்கள்
இடையரு வர்க்கப் போரினுல் பெற்ற
இணையிலா மார்க்கம் தொடருமோ மென்ற
உயரிய செம் பதாகையைப் பற்றி
மேதின ஊர்வலம் தொடர்கிறது.

மனிதனை மனிதன் சுரண்டிடும் அமைப்பை
மறைத்திடப் பற்பல திரைகளை இட்டு
ஆயிரம் தத்துவக் கதைகள் அவிழ்த்து
அடக்கு முறைகள் பற்பல செய்து
மறுத்திட நினைக்கும் மக்களின் வாழ்வை
மண்ணில் மலர்ந்திட மார்க்கம் திறந்த
மாக்சிச லெனினிச மாஓ வழியினில்
மேதின ஊர்வலம் தொடர்கிறது.

**தணிகையன்**

# சோவியத் ஏகாதிபத்தியமே போலந்துமீது கைவையாதே!

**போ**லந்து தேசம் கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்த, சோவியத் யூனியனின் எல்லையில் அமைந்துள்ள ஒரு நாடாகும். இரண்டாவது உலக யுத்தகாலத்தில் பாசிசத்திற்கு எதிராகவும், ஹிட்லரின் கொடிய ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் வீரம் செறிந்த போராட்டம் நடத்தி விடுதலை பெற்ற நாடுகளில் போலந்து தேசமும் ஒன்ருகும். விடுதலையைத் தொடர்ந்து சோஷலிச நிர்மாணத்தில் வெற்றிநடைபோட்டுவந்த அந்த நாட்டை சோவியத் சமூக ஏகாதிபத்தியம் காலப்போக்கில் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது. பொருளாதார அரசியல் இராணுவப் பிடிக்குள் போலந்தை இறுக்கி, சோவியத் செல்வாக்குக்கு உட்பட்டவர்களை ஆட்சியில் அமர்த்தி தனது நேசநாடு என்ற பெயரில் அந்த நாட்டை அமுக்கி வந்தது சோவியத் யூனியன்.

சோவியத் யூனியனது சமூக ஏகாதிபத்திய நடவடிக்கைகளும், சோவியத்திற்கு பணிந்து செல்லும் போலந்து ஆளும் வர்க்கத்தின் தவருன தலைமையும் அந்த நாட்டின் பொருளாதாரத்தை முற்று முழுதாகச் சீரழித்துவிட்டது. தொழிலாளர்களினதும், உழைக்கும் வெகுஜனங்களினதும் வாழ்க்கை நிலமைகள் மோசமானமுறைகளில்வீழ்ச்சியடைந்துள்ளன. இவற்றின் பிரதிபலிப்பே அண்மைக் காலங்களில் போலந்து தொழிலாளர்களும், விவசாயிகளும், புத்திஜீவிகள், மாணவர்கள் போன்ற லட்சோப லட்சம் மக்களின் எதிர்ப்புப் போராட்டங்களாகும்.

போலந்துநாட்டில் சோஷலிசம் சீரழிக்கப்பட்டுவிட்டது. அதன் இடத்தை அரசுமுதலாளித்துவம் சோஷலிசத்தின் பெயரால் இடம்பிடித்துக் கொண்டுள்ளது. அதனுல் தொழிலாளர்கள் உழைக்கும் மக்கள் பல்வேறுவித வழிகளில் பொருளாதார நெருக்கடிகளையும் அரசியல் அடக்குமுறைகளையும் எதிர்நோக்கவேண்டியுள்ளனர்.

இக்கட்டத்தில் போலந்து மக்கள் போலந்தின் ஆளும் வர்க்கத்திற்கு எதிராகவும், அக்கும்பலின் எசமானனை சோவியத் ஏகாதிபத்தியத்தையும் காணகடூரமாக எதிர்க்கின்றனர். போலந்து மக்களின் எதிர்ப்பு இயக்கங்களும், பிரச்சினைக்கான கோரிக்கைகளும் நியாயமானதுமட்டுமன்றி உள்நாட்டில் தீர்வு காணப்படவேண்டிய அதிமுக்கிய பிரச்சினைகளாகவும் உள்ளன.

இதேவேளை சோவியத் யூனியன் ''போலந்தில்சோஷலிசத்திற்கு அச்சுறுத்தல்'', ''நேசநாட்டைப் பாதுகாத்தல்'' ''ஏகாதிபத்தியச் சூழச்சிக்குப் போலந்துபலியாவதை தாம் ஏற்கமுடியாது'' என்ற பிரசாரங்களைச் செய்து போலந்துக்குள் தமது படைகளை அனுப்பி மக்களின் எதிர்ப்பை நசுக்க முன்வந்துள்ளது. எந்தநேரமும் சோவியத் படைகள் போலந்திற்குள் புகுந்து அப்பட்டமான ஆக்கிரமிப்பு ஒன்றில் ஈடுபடலாம்என்ற நிலையே தற்போது நிலவுகின்றது.

செக்கோஷலவேக்கியாவிற்குள், ஆப்கானிஸ்தானுக்குள் பல லட்சம் படைகளைக் கொண்டுசென்று அப்பட்டமாகவே ஆக்கிரமித்த சோவியத் யூனியன்; அங்கோலா, எதியோப்பியா போன்ற நாடுகளில் கியூபக் கூலிப்படைகளுடனும் கம்பூச்சியா லாவோஸ் போன்ற நாடுகளில் வியட்னும் கூலிப்படைகளுடனும் இணைத்து அந்நாடுகளில் ஆக்கிரமிப்பை நடத்திவரும் சோவியத் யூனியன் அடுத்த தனது ஆக்கிரமிப்புப் பட்டியலில் போலந்தைக் குறிவைத்திருக்கின்றது. ஆதலால் போலந்தில் நடைபெறும் சம்பவங்கள் உள்நாட்டுச் சம்பவங்களாகும். அதில் சோவியத் யூனியனுக்கோ அன்றி அமெரிக்காவிற்கோ தலையிட எவ்வித உரிமையும் கிடையாது. போலந்து மக்கள் தமது தலைவிதியைத் தாமே தீர்மானிப்பதற்கு விடப்படவேண்டுமே அன்றி அந்நியத் தலையீடு எச்சந்தர்ப்பத்திலும் இடம்பெறக்கூடாது. ★

## 1-ம் பக்கத் தொடர்......

னர். சீனியின் விலை கிலோ 75 சதமாக உலக சந்தையில் விற்கும்போது அரசாங்கம் அதனை கிலோ ரூபா 16/50க்கு விற்கிறது. இப்போது வரட்சியை காரணம் காட்டுகின்றது. ஆனுல் இந்த வரட்சி என்பது யூ-என் பி.யின் எஜமானர்களான ஏகாதிபத்திய வாதிகள் மலைகளில் காடுகளை அழித்து வர்த்தகப் பயிர்களை நாட்டிய நாள்முதல் இருந்து வருகின்றது என்பதையும் மக்கள் அறிவார்கள்.

### அரசு மக்களை பயமுறுத்துகிறதா?

நமது நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடியானது ஓர் உலகளாவிய பிரச்சினை என்றும், எந்த ஒருநாடும் இதிலிருந்துவிடுபட முடியாதென்றும் இதை நமது நாட்டு மக்கள் உணர்ந்து பொறுமையுடன் சகித்துக் கொள்ளவேண்டும் என்றும், யூ.என்.பி. ஆட்சியின் தலைவர்கள் உபதேசம் செய்கின்றனர். ''தமது ஜனநாயக உரிமைகளை மக்கள் எவ்வாறு பிரயோகிக்க வேண்டும் என்பதை தெரிந்து கொள்ளல் வேண்டும். எந்த வகையான ஆட்சேபனைகளும் சகித்துக் கொள்ளப்பட மாட்டாது. குழப்பத்தை தூண்டுவோரை பொலிசும் இராணுவமும் கவனித்துக்கொள்ளும்'' இவ்வாறு ஜனுதிபதி மக்களை அச்சுறுத்தும் வகையில் கூறியுள்ளார்.

நாம் இந்தச் சகதிகுள் இருப்பது யூ. என். பி. கடைப்பிடித்த கொள்கையின் நேரடி விளைவு. இதை மக்கள் நன்கு அறிந்தவர்கள். தங்குதடையற்ற இறக்குமதியை அனுமதித்து, அன்னிய ஏகபோக நிறுவனங்கட்கு உதவிசெய்வதற்காக நாணயத்தின் பெறுமதியைக் குறைத்ததினுலேயே வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்தது; தேசிய பொருளாதாரம் அழிக்கப்பட்டது; ஆட்குறைப்பும். வேலையின்மையும் ஏற்பட்டது;நாட்டின் செல்வம் வெளியே செல்கின்றது; பெற்றுக்கொள்ளப்பட்ட பெருமளவு அன்னியக் கடன்கள் அபிவிருத்தி செலவிடப்படவில்லை. அவை யூ. என்.பி.யின் 'ஊழல் நண்பர்'களின் பைகளுக்குள் சென்றுள்ளன.

### யூ.என்.பியை முழுமையாக அப்புறப்படுத்தமுடியும்

நாட்டு மக்கள் தங்களையும் தேசத்தையும் பாதுகாப்பதற்கான உடனடி நடவடிக்கைகளில் ஈடுபட்டேயாக வேண்டும். மக்களின் அன்றாட வாழ்வுக்கு எதிராக குறிவைத்துத் தாக்கப்படும் விஷயங்களை எதிர்த்துப் போராடுவதற்கும், மக்களினதும், நாட்டினதும் சுதந்திரத்திற்காகவும் போராட்டங்களை மக்கள் முன்னெடுக்க வேண்டும்.

இதற்கான ஒரேவழி யூ. என்.பிக்கு எதிரான சகல சக்திகளையும், வர்க்கப் பிரிவுகளையும் ஒரு பொது வேலைத் திட்டத்தின்கீழ் ஐக்கியப்படுத்துவதாகும். அவ்வாருன பொது வேலைத் திட்டத்தின் மூலம் உருவாகும் ஐக்கியப்பட்ட போராட்டத்தினுல் மட்டும் யூ.என்.பி. யை அதனது சகல அதிகாரபீடங்களிலிருந்தும் அப்புறப்படுத்த முடியும்.

மக்களது போராட்டத்தின்மூலம் யூ. என். பி. யைத் தோற்கடித்து நாட்டின் பொருளாதாரத்தை நவகாலனித்துவப் பிடியிலிருந்து விடுவித்து, ஒரு சுதந்திரமான— தேசிய பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பி, மக்களுக்கு சகலவழிகளிலும் சுபீட்சத்தை கொடுக்கும் ஒரு இலங்கையை உருவாக்குவதே எமது இலட்சியமாகும்.

அச்சுப்பதிப்பு; யாழ்ப்பாண அச்சகம், 407, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்; வெளியீடு: செ[illegible]ம் 15/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்